
1885 3 1885

Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

THE REGISTRAR ... BOOKS
20 MAR 1935

பௌர்ணமிதோறும் வெளிவரும்

| Vol. 7 | பாவ ஸம்வத்ஸரம்<br>பால்குண மாஸம்.<br>பௌர்ணமி (20-3-35) சோமவாரம். | No. 9. |
|---|---|---|
| புஸ்தகம் 7 | | நெ. 9. |

| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம் (மத்வாசாரியார்) | 256 A. |
| 2. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 264 |
| 3. | மஹாலட்சுமி. | 268 |
| 4. | விதவா விவாக கண்டனம். | 272 |
| 5. | ஸ்ரீமத்வ விஜயம். | 275 |
| 6. | சங்கரலீலா விலாஸம். | 280 |
| [illegible] | [illegible]ஸரம் பண்டிகை கொண்டாடும் விதம். | 284 |
| [illegible] | [illegible]ட்டு. | 286 |
| [illegible] | [illegible]ங்கள். | 287 |

N35-7.5
208725

பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்துமபடி விடாதீர்கள், ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்ஷயோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India).

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்யபுருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

## P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய சுரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும் போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

**ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,**

கரூர், S. I. Ry.

Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.

# திருச்சி
## ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17, சின்னக்கடைத்தெருவு,
தெப்பக்குளம், P. O. திருச்சிராப்பள்ளி.

**வைத்தியர்களுக்கு எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும். விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.**

## உங்கள் குழந்தைகளை

டாக்டர் C. B. S. ராவ் அவர்களுடைய
*மூன்று குடும்ப ரத்னங்களால்*
*காப்பாற்றுங்கள்.*

பால கோரோஜனை மாத்திரைகள்.
பால கஸ்தூரி மாத்திரைகள்
பால சக்தியமிருதம்.

*குழந்தைகளின் எல்லா வியாதிகளையும் தீர்க்கவல்லது.*
**உங்கள் ஸமீபத்திலுள்ள மருந்து வியாபாரிகளிடமும்,**
**தாதா அண்டு கோ. மருந்து வியாரிகள்.**
*நயினியப்ப நாயக்கன் தெருவு, ஜார்ஜ்டவுன்,*
*சென்னையிலும் கிடைக்கும்.*
*அல்லது*
*டாக்டர் C. B. S. ராவ், ஸ்ரீரங்கம், திருச்சி.*

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदो
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ।
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

### இருபத்து ஒன்றுவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 234-பக்கம் தொடர்ச்சி)

அப்பொழுது பாபம் செய்பவர்களில் முதல்வனான துரியோதனனின் தம்பி துச்சாசனன் தன் தந்தையைப் பார்த்துப் பேசினான். எங்களிடம் வந்து சேர்ந்த பாண்டவர்களின் எல்லா ஐசுவரியத்தையும் மீண்டும் விடுவித்துவிட்டாய். பீமசேனரால் எங்கள் ஸம்ஹாரம் நிச்சயமாய் ஏற்படப்போகிறது. ஆகையால் எங்கள் பொருட்டு பாண்டவர்களை மறுபடியும் வரவழை. மறுபடியும் சொக்கட்டான் ஆட்டம் நடக்கட்டும். பாண்டவர்கள் தோற்றுப்போய் அரண்யத்திற்கு செல்லட்டும். என்றிவ்வாறு துச்சாசனனால் பேசப்பட்ட திருதராஷ்டிரன் பாண்டவர்களை அந்த ஸபைக்கு மீண்டும் வரவழைத்தான். மறுபடியும் சொக்கட்டானுடைய வரவழைக்கப்பட்டவரான தர்மபுத்திரர் அவருடைய தம்பிமார்களாலும், திரௌபதியாலும், குந்தியாலும் தடுக்கப்பட்டவராயினும் அதைக் கேளாமல் ஸபைக்கு வந்து சேர்ந்தார். பாண்டவர்கள் தோற்றுப்போனால் பன்னிரண்டு வருஷம்

வனவாஸமும் ஒரு வருஷம் அக்ஞாதவாஸமும் செய்யவேண்டுமென்றும் அந்த அக்ஞாத வாஸம் தங்கள் நகரத்திற்கு அதிக தூரமில்லாததான பிரஸித்த அரசனின் நகரத்தில் செய்யப்படவேண்டுமென்றும், அந்த அக்ஞாத வாஸம் செய்யும்பொழுது துரௌபதி பாண்டவர்கள் இவர்களில் ஒருவரைப் பார்த்துவிட்டாலும், எல்லோரும் திரும்பவும் பன்னிரண்டு வருஷம் வனவாஸம் ஒரு வருஷம் அக்ஞாத வாஸம் செய்யவேண்டுமென்றும், மேலே சொன்ன விதிகளில் வனவாஸம் செய்யும்பொழுது நகரத்தினுள்ளே பிரவேசித்தல், அக்ஞாதவாஸத்தில் அபிரசித்தனான அரசனின் நகரத்தில் வசித்தல், இவைகளைச் செய்தால் மீண்டும் பன்னிரண்டு வருஷம் வனவாஸமும் ஒரு வருஷம் அக்ஞாத வாஸமும் செய்யவேண்டும் என்றும் துரியோதனன் துச்சாசனனின் யோஜனையின்பேரில் பந்தயத்தை ஏற்பாடு செய்தான். சொக்கட்டானின் மர்மத்தை அறிந்த சகுனியுடன் தர்மபுத்திரர் இந்த அனுத்யூதத்தில் தோல்வியடைந்து, தம்பிமார்களுடன் கூடி வனத்திற்கு பிரயாணம் செய்ய விரும்பினர். அப்பொழுது பாபம் செய்பவனான துச்சாசனன் பீமசேனரை அடுத்தடுத்து கௌ: கௌ: என்று சொல்லி சிறித்து கூத்தாடினன். சபையில் கூத்தாடிக்கொண்டே துச்சாசனன் துரௌபதியைப் பார்த்துப் பேசினன். கல்யாணி! நீ பதி இழந்தவளாய் ஆனாய். துரியோதனனின் வீட்டுக்குச் செல். எல்லா பாண்டவர்களும் பதர்கள்போல் ஸாமர்த்தியமிழந்தவர்களாய் அந்தம்தமஸ்ஸை அடைந்துவிட்டனர். இவர்கள் மீண்டும் தலை தூக்கப்போவதில்லை, என்றிவ்வாறு சொல்லிக்கொண்டே துச்சாசனன் பீமசேனர்போல் நடந்துக் காட்டி அவரைப் பழித்தான். அப்பொழுது எல்லா திருதராஷ்டிர பிள்ளைகளும் சிறித்தனர். அச்சமயம் பீமசேனர் உங்கள் எல்லோரையும் யுத்தத்தில் நான் கொல்கிறேன் என்று சபதம் செய்தார். இவ்வாறு பீமசேனர் சொல்லவும் திருதராஷ்டிர குமாரர்கள் எல்லோரும் துரோணாசாரியாரை சரணம் புகுந்தனர். துரோணர் இருக்குமிடத்தில் அவருடைய பிள்ளையான அசுவத்தாமாசாரியார் இருப்பார். மேலும் துரோணரின் கக்ஷியில் பீஷ்மாசாரியாரும்



கிருபாசாரியாரும் இருப்பார்கள். பீமசேனர் இந்த குருமார்களை மீறி நடக்கமாட்டார் என்ற உத்தேசத்தால் துரோணாசாரியாரை சரணமடைந்தார். துரோணர் துரியோதனாதிகளைப் பார்த்துப்பேசியதாவது, நான் பிராம்மணனாய் இருப்பினும் என் பிள்ளையுடனும் கிருபாசாரியாருடனும் சேர்ந்து உங்களுக்காக ஆயுதம் எடுக்கிறேன். உங்களை ஸம்ரக்ஷிக்கும் விஷயத்தில் என்னால் இயன்றவளவு எத்தனப்படுகிறேன். ஆனால் பீமசேனரிடமிருந்து உங்களைக் காப்பாற்றித்தருவதில் நான் சக்தனன்று. ஸத்யம் பேசுகிறேன், என்றிவ்வாறு சொன்னார். பிறகு அதிசூரர்களான பாண்டவர்கள் துரௌபதியுடன் சேர்ந்து ஸபையினின்றும் வனத்திற்கு புறப்பட்டனர். அப்பொழுது துரியோதனன் யௌவனமுள்ள ஸிம்ஹம்போல் விலாஸ நடையுள்ள பீமசேனரைப் பரிகசித்து தன் நடையால் பழித்தான். பீமசேனர் பார்த்துவிட்டு ஸபையினின்றும் பாதிவெளியே புறப்பட்டு மறுபடியும் துரியோதனன் பழிப்பதை சிவந்த கண்களுடன் "உன் மற்றொரு தொடையையும் யுத்தத்தில் பேதிக்கிறேன்" என்று சொல்லி அந்த அயோக்யர்களின் சபையினின்றும் புறப்பட்டார். வனத்திற்கு புறப்பட்ட பாண்டவர்களின் பின்னடி மக்களிடம் அன்பு கொண்டவளாய் குந்தி புறப்பட்டாள். அதிகமாய் அழும் குந்தியை விதுரர் தன் வீட்டில் இருக்கச்செய்தார். விரைவாய் செல்லும் பாண்டவர்கள் துரௌபதியுடன் சேர்ந்து குந்தியை நமஸ்கரித்துவிட்டு வனத்திற்கு புறப்பட்டனர். அப்பொழுது யுதிஷ்டிரர் என் கோபதிருஷ்டியால் எல்லா கௌரவர்களைப்பார்த்து விட்டு தகித்துவிட மாட்டேன் என்று கருணையுள்ளவராதலால் தலை குனிந்துகொண்டு புறப்பட்டார். பாஹுசாலியான பீமசேனர் இந்தஇரு புஜங்களாலேயே எல்லா சத்ருக்களையும் நான் கொல்ல முடியுமென்று அறிவிக்க இருகைகளையும் உயரத்தூக்கிக்கொண்டு புறப்பட்டார். துரியோதனாதிகளின் ஸ்திரீ ஜனங்கள் தங்கள் இறந்த புருஷர்களைக் அணைத்துக்கொண்டு கூந்தலை அவிழ்த்துக் கொண்டவர்களாய் ஆகப்போகின்றனர் என்று அறிவிப்பதற்காகவே, அவிழ்ந்த கூந்தலை முடித்துக்கொள்ளாமலேயே துரௌ

பதி அந்த சபையினின்றும் புறப்பட்டாள். மேலான அஸ்திரங்களை அறிந்தவர்களில் சிரேஷ்டனான அர்ஜுனன் இருகைகளாலும் வீதி மண்ணை வாறி தூற்றிக்கொண்டு இவ்வாறே இருகைகளாலும் பாணங்களை சத்ருக்களிடம் விருஷ்டி செய்யப் போகிறேனென்ற அபிப்பிராயத்துடன் புறப்பட்டான். இப்பேர்ப்பட்ட சங்கடமான நிலைமையில் சத்ருக்கள் எங்கள் முகத்தைப் பார்க்கவேண்டாமென்று மனதை நிச்சயம் செய்து நகுல சகதேவர்கள் தலை குனிந்து கொண்டு புறப்பட்டனர். துரியோதனாதிகள் இறந்த பின் நான் தான் ப்ரேதகாரியங்களை நடத்த வேண்டுமென்று அறிவித்துக்கொண்டு புரோஹிதரான தௌம்யாசாரியார் ப்ரேதகாரியங்களுக்கு உதவும் ஸாமக்த மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு பாண்டவர்களுக்கு முன்னாடி புறப்பட்டார். பிறகு பாண்டவர்களின் பின்னாடி பதினான்கு சிறு தேர்களுடன் கூடிய முக்கிய ரதங்களை எடுத்துக்கொண்டு ஸாரதிகள் புறப்பட்டனர். சமையற்காரர்கள், அவர்களில் முக்யஸ்தர்கள், அன்புடன் சேவைசெய்யும் வேலைக்காரர்கள் பாண்டவர்களின் பின்னாடி புறப்பட்டனர். இந்த ரதங்கள் முதலியவை ஸ்ரீகிருஷ்ணருக்குச் சொந்தமானவை. பாண்டவர்களின் அனுபோகத்திற்காகமாத்திரம் அவர் கொடுத்திருந்தார். ஆகையால் சொக்கட்டானில் இவைகள் போய்விடவில்லை. பிறகு பாண்டவர்கள் தங்களுடன் கூடவந்த ஹஸ்திநாநகர ஜனங்களை எல்லோரையும் பார்த்து கங்கையின் கரையிலுள்ளவனத்தின் ப்ரமாணமென்ற ஆலமரத்தின் அடிக்கு வந்து உட்கார்ந்தார். பிறகு பாண்டவர்கள் எல்லா ஜகத்திற்கும் இருப்பிடமாயும் பிரம்மருத்திராதிகளாலெல்லாபொழுதும் பூஜிக்கப்பட்டவராயும் பக்தர்களுக்கு ஸம்ஸாரத்தைப்போக்குகிறவராயுமுள்ள ப்ரபுவான நாராயணரை மனதால் ஸ்மரித்தார்.

ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் இயற்றிய
ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில்
இருபத்தி ஒன்றாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

---



## இருபத்தி இரண்டாவது அத்யாயம்.

---

குருவம்சத்து சிரேஷ்டர்களான பாண்டவர்கள் தங்களுடன் வர விரும்பும் ஹஸ்தினாபுரத்து ஜனங்களை சிரமப்பட்டு நிறுத்திவிட்டு ராத்திரி வேளையில் பயங்கரமான வனத்தில் ப்ரவேசித்து, பிறகு கிம்மீரனென்ற ராக்ஷஸனிடம் வந்தனர். பரமசிவனின் வரத்தால் எல்லோராலும் ஜயிக்க மாளாதவனும் பகாஸுரனின் தம்பியுமான கிம்மீராஸுரன் பாரியையுடனும் ஸகோதரர்களுடனும் கூடி பீமசேனரைக்கொல்ல இச்சைப்பட்டு பெரிய மரம் மலைகளை விட்டெறிந்துகொண்டு எதிர்த்து வந்தான். பீமசேனர் கிம்மீராஸுரனுடன் யுத்தம் செய்து அவனை பூமியில் தள்ளினார். நாராயணனையே தேவதையாகக்கொண்ட யுத்தமாகிற யக்ஞத்தில் கிம்மீராஸுரனை பலாத்காரமாய் பசுவாய்ச் செய்தார். அந்த கிம்மீராஸுரனை ஸம்ஹரித்துவிட்டு அவனுடைய வனத்தின் நடுவில் பாண்டவர்கள் வசித்திருக்கையில் பத்தாயிரம் ஸன்யாசிகளும் எண்பத்தி எண்ணாயிரம் மகரிஷிகளும் வந்து சேர்ந்தனர். இவர்களுடன்கூடி பாண்டவர்கள் இவர்களை போஷிக்க சிந்தைப்பட்டனர். யுதிஷ்டிரர் இந்த ரிஷிகளின் போஷணத்திற்காக யோசித்து ஸூரியாந்தர்கதனான ப்ரபுவான ஸ்ரீநாராயணனை விசேஷமாய் பூஜித்து அந்த ஸவித்ருநாமக நாராயணனிடமிருந்து, அக்ஷயமான அன்னத்தையும், விரும்பும் உத்தமமான அன்னத்தையும் தரக்கூடியதும் ரத்னங்கள் வஸ்திரங்கள் அச்வாதிகள் இவைகளை கொடுக்கக்கூடியதுமான பாத்திரத்தைப்பெற்றார். இந்திரப்ரஸ்தத்தில் அனேக கோடிக்கணக்கான தாஸர்களுடன் கூடிய பாண்டவர்களின் கிருகத்தில் தங்கப்பாத்திரங்களில் எந்த ரிஷிகளும் ஸன்யாசிகளும் போஜனம் செய்திருந்தனரோ அவர்கள் எல்லோரையும் தர்மபுத்திரர் ஒவ்வொருவருக்கும் முப்பது தாஸர்கள் வீதம் வேலை செய்யக்கொடுத்து அக்ஷயபாத்திரத்தின் ப்ரபாவத்தால் போஷித்து வந்தார். ஸாதுஜனங்களுடன் சேர்ந்திருக்க விருப்பத்தாலேயே இந்த முனீச்வரர்களும் மற்றும் இதர ரிஷிசிரேஷ்டர்களின் கூட்டங்களும் உத்தமமான அர்த்தங்களால் மேலானதாயுள்ள கதைகளை

ப்ரேரணையின்பேரில் செய்யும்படியாயும் செய்யாதிருக்கும்படியாயும் விதிநிஷேதங்களைச்செய்வதில்லை. பிறகு மைத்ரேயர் திருதராஷ்டிரனிடம் வந்தார். திருதராஷ்டிரன் கர்ணன் சகுனியுடன் சேர்ந்த பிள்ளைகளை அழைத்து அவர்களுடன் கூடி மைத்ரேயரை பூஜித்தான். மைத்ரேயர் பாண்டவர்களை சிலாகித்துக் கொண்டு அவர்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்து விடும்படி சொன்னார். முனிச்ரேஷ்டரான மைத்ரேயர் கிம்மீராஸுரனை ஸம்ஹரித்தது முதலான கதையைச்சொல்லிக்கொண்டு அதிகமாய் பீமசேனரின் பலத்தை சிலாகித்தார். இந்த சிலாகனையைக் கேட்டு கடோரனான துரியோதனன் நகைத்து தன் தொடையைத் தட்டினன். கடூமான தேஜஸ்ஸுள்ள மைத்ரேயர் உன் தொடை பேதிக்கப்பட்ட மகாயுத்த மேற்படட்டுமென்று துரியோதனனுக்கு சாபம் கொடுத்தார். திருதராஷ்டிரன் மைத்ரேயரை சாபம் நிவிருத்தி செய்யும்படி நமஸ்காரம் செய்தும், பாண்டவர்களுக்கு ராஜ்யம் கொடுக்காமலிருந்தால் என் சாபத்தின்படி தான் நடக்கப்போகிறது என்று சொல்லி புறப்பட்டுப்போனார். தன் தந்தையான திருதராஷ்டிரன் கேட்டதின்பேரில் விதுரன் விரிவாய்ச்சொன்ன கிம்மீராஸுர விருத்தாந்தத்தை துரியோதனன் கேட்டுவிட்டு பயமடைந்தான். பிறகு காம்யக வனத்தில் வசித்துக்கொண்டிருந்த பாண்டவர்கள் தாங்கள் வனவாசம் செய்துவரும் சமாசாரத்தை ஸ்ரீகிருஷ்ணர் முதலானவர்களுக்குச் சொல்லி அனுப்பினார்கள். அதைக்கேட்டுவிட்டு ஸ்ரீகிருஷ்ணர் ஸத்யபாமாதேவியுடன்கூடி பாண்டவர்களிடம் வந்துசேர்ந்தார். பாஞ்சால ராஜன் முதலான ஸம்பந்திகள் வனத்திற்கு வந்துசேர்ந்தனர். துரியோதனனிடம் கோபங்கொண்ட ஸ்ரீகிருஷ்ணரை பாண்டவர்கள் அப்பொழுது நமஸ்காரம்செய்து ஸ்ரீகிருஷ்ணரின் அநந்தமான குணங்களை உரக்கச் சொல்லிக்கொண்டு அவரைப் பொறுக்கும்படி க்ஷமாபணம் செய்துகொண்டனர். அப்பொழுது த்ரௌபதி அழுதுகொண்டு ஸ்ரீகிருஷ்ணரின் காலடியைச்சேர்ந்தாள். அவள் ஸ்ரீகிருஷ்ணருடைய பாதங்களில்விழுந்து ஸர்வஸ்வாமியும் ஸ்வதந்திரமான ஸ்ரீகிருஷ்ணரை ஸ்தோத்திரம் செய்தாள். (தொடரும்)



# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 211-ம் பக்கம் தொடர்ச்சி).

## குருட்டுத்தனம் அனுபவித்தது.

ஸ்ரீவாதிராஜர் இப்பேர்ப்பட்ட மகா மகிமை வாய்ந்த உத்தம புருஷராயினும் யாவரும் அவரவர்களின் ப்ராரப்த கர்மத்தை அனுபவித்தே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதை தன் அனுபவத்தால் உலகில் நன்கு காட்டினர். அதாவது இவருடைய பார்வை தீமென்று மங்கி கொஞ்சமேனும் பார்வையில்லாமல் போய்விட்டது. பகவத் பூஜை செய்வதே அசாத்யமாய் போய்விட்டது. நடமாட்டமும் குறைந்தது. எதற்கும் இதாராளுடைய சகாயம் வேண்டும்படியாய் ஆகி விட்டது. இவ்வாறு சில வருஷங்கள்கழியவே ஸ்ரீவாதிராஜர் உடுப்பி ஸ்ரீகிருஷ்ணரை பூஜை செய்யவேண்டிய பரியாய காலம் நெருங்கியது. தாம் இவ்வளவு நாள் குருடராய் இருப்பதுகூட அவ்வளவு துக்கமாய் தோன்றவில்லை. ஸ்ரீகிருஷ்ணரை பூஜிக்கமுடியாமல் நான் உயிருடனிருக்கையிலேயே என் பரியாய காலத்தில் இதாராளை பூஜிக்கவிட நேர்ந்ததே என்று மிகவும் துக்கித்தார். மனம் நொந்தார். வாய் விட்டு அலறினர். பகவானை பலவாறாய் துதித்தார். ஏகாந்த பக்தரான ஸ்ரீவாதிராஜரின் அந்தரங்கமான தோத்திரத்தை மெச்சி ஸ்ரீகிருஷ்ண[ர்] அவருடைய குருட்டுத்தனத்தைப்போக்கி திவ்ய திருஷ்டியை அனுக்ரஹித்தார். அதனுல் ஸ்ரீவாதிராஜர் நல்ல பார்வையை அடைந்து ஆனந்தமாய் அந்த பரியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணரை பூஜித்தார். அ[ச்] சமயம் அவர் செய்த ஸ்தோத்திரங்களில் ஸ்ரீகிருஷ்ண ஸ்துதியும் ஆர்யாவிருத்தத்திலுள்ள லக்ஷ்மி ஸ்துதியும் பிரஸித்தமானவைகளாய் இருக்கின்றன, ஸ்ரீகிருஷ்ண ஸ்துதியில் அவர் சொல்வதாவது:—
"யதிதிசஸி நயனபடுதாம் தர்ஹி பவச்சரணகமல ஸேவாயை। ஆயாஸ் யாமி தயாளோ கிருஷ்ண நசேத் பூஜயாமி கதமந்த: ॥ ஸம்பாவிதஸ்ய பும்ஸ: மாணுததிரிச்யதே கிலாகீர்த்தி:। இதி கீதாஸு ஹி கீதம் பவதா பவதாபதிமிரரவே॥ நாநாபராத சதகம் ஹீனே யத்யஸ்தி கிருஷ்ணமயிமதே। தீனஜனமுத்தர்த: க்ஷந்தவ்யம் தத்க்ஷமாவதா பவதா॥ குர்தன ஸந்ததிலஸிதம் சூடாத்ரயசோபி மௌனிபாகமஹம், ச[ந்]த்ர பத்ரநேத்திரம் சசிவதனம் ப்ரதிதினம் திதிருக்ஷாமி" ஹேகிருஷ்ணு!

கருணை சமுத்ரா! எனக்கு பார்வையை நீ தந்து அனுக்ரஹித்தால் தான் தங்கள் திருவடி கைங்கர்யம் செய்ய நான் சுயமாக வரக்கூடும். இல்லாவிடில் நான் இதராளின் சகாயத்துடன் அங்கு தங்கள் சரண சன்னிதானத்திற்கு உடுபிக்கு வந்து என்ன செய்வது. கண் கெட்டுப் போய்குருடனான நான் தங்கள் சர்வாவயவங்களைத்தொட்டு அபிஷேகம் அலங்காராதிகளைச்செய்து ப்ரதி அவயவங்களையும் பார்த்து பரமா னந்தமடைந்து எப்படி பூஜிப்பேன். மரியாதையுள்ள புருஷன் பிராணனை யாவதுவிடலாமேஒழிய அபப்பெயர் அடையலாகாதென்று ஸம்ஸாரதாப மாகிய இருளுக்கு கதிரவன் போன்ற தாங்கள் பகவத்கீதையில் சொல்லி யிருக்கிறீர்கள். கண் கெட்டுப்போய் தங்களை பூஜிக்க முடியாமல் என் பரியாய பூஜை நின்றுபோய்விட்டது. என்று உலகெங்கும் அபகீர்த்தி ஏற்பட்டு விட்டால் நான் உயிருடன் இருப்பதே பிரயோஜனமில்லாத தாகும்; இதைவிட நான் பிராணனை விடுவது மேலானது. ஹே! கிருஷ்ணா! தாழ்ந்தவனான என்னிடம் கணக்கற்றதான பலவகைக் குற்றங்கள் இருப்பதாயும் அதனால் என் கண் கெட்டுப்போய்விட்டதாயும் தங்கள் அபிப்பிராயம் இருந்தால் வருந்துவோர்களின் கஷ்டத்தை நிவிருத்தித்து அவர்களை உத்தரிப்பவரென்று பெருமை வாய்ந்தவரான தாங்கள் அவைகளை எல்லாம் பொருத்து என்னிடம் அனுக்ரஹம் செய்யவேண்டும். சுருண்டமயிர்கள் அடர்ந்து சோபிப்பதாயும் முக் குடுமி வைத்து விளங்குவதாயுமுள்ள சிரஸ்ஸுள்ளவரும் கமலக்கண்ண னும் சந்திரவதனனுமான ஸ்ரீகிருஷ்ணா உம்மை ஒவ்வொரு நாளும் நான் எப்பொழுது காணப்போகிறேன். என்று இவ்வாறு அழகாய் ஸ்தோத் திரம் செய்துள்ளார். ஆர்யா விருத்தத்தில் அவர் இயற்றிய ஸ்ரீலக்ஷ்மீ ஸ்தோத்திரத்தில் சொல்வதாவது, 'உன்மீலய மன்னயனே த்வம் மன்யே லக்ஷ்மி லோகமான்யாஸி। சின்மயஸுபகாவயவே கர்மகர: ஸ்யாமஹம் சதவகமிது:।। மன்மதஜனனி மனோக்ஞே மமதாரஹித யோகி குலமஹிதே। திருஞ்மலமுன்மீலயமே ஸம்யக் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மீக்ஷேஹம்'।। மகாலட்சுமிதாயே! நீ உலகத்தாரால் நன்கு மதிக்கப்பட்ட வளாய் இருப்பதாய் நான் திடமாய் எண்ணியிருக்கிறேன். மூடிக் கிடக்கும் என் கண்ணைத்திறந்துவிடு. நல்ல பார்வையை அளிப்பாய். ஞான ஸ்வரூபமுள்ள மங்களகரமான அவயவமுள்ளவளே! நீ ஆசைப் படும் உன் புருஷனான ஸ்ரீகிருஷ்ணரின் ஸுந்தர விக்ரஹத்தைத் தொட்டு அலங்கரித்து எப்படி கைங்கர்யம் செய்வேன். என்று பலவாறு ஸ்ரீகிருஷ்ணரைப்பார்த்து பரிசாணம் செய்ய பார்வை அளிக்கும்படி பிரார்த்தித்திருக்கிறார்.



## இதர மகா சக்திகள்

ஸ்ரீவாதிராஜரின் குருவான ஸ்ரீவாகீச தீர்த்தரின் அருளால் ஸ்ரீ வாதிராஜருக்கு அவருடைய பூர்வாசிரமத்து தாய்தந்தையர்களுக்கு சாமக்ரியைகளைச்செய்ய ஸகோதரர் ஒருவர் பிறந்திருந்து மகா பண்டி தராயிருந்தார். அவர் தன் பெற்றோர்கள் இறந்தபின் அவர்களுக்கு ச்ரமக்ரியைகளைச் செய்து தன் கடமைகளை செலுத்திவிட்டு தமைய னான ஸ்ரீவாதிராஜரின் அடிபணிந்து அவரிடம் சத் சாஸ்திரங்களை அப்யஸித்து விஷய வைராக்யம் பெற்றார். ஸ்ரீவாதிராஜர் அவருக்கு ஸன்யாஸம் தந்து அச்யுதப்ரேக்ஷ தீர்த்தரின் மடமாகிய பண்டர்கேர் மடத்திற்கு அதிபதியாக்கினார். இவர்பெயர் ஸ்ரீஸுரோத்தமதீர்த்தர். ஸ்ரீவாதிராஜரின் ஸகோதிரியின் புருஷன் விஷபாதையால் மரண மடைய ஸ்ரீவாதிராஜர் 'கன்னடத்தில் 'பீம நிஸ்ஸீம மகிமா' என்ற கீர்த் தனம் பாடி ஸ்ரீபீமசேனரின் அனுக்ரஹம் ஏற்படும்படி செய்து அவ ருக்கு உயிர் வரும்படி செய்தார். ஒரு ஊரில் ராஜதுரோகத்திற்காக ஒருவனை அரசன் கொன்றுவிட அந்த ராஜத்ரோஹியின் சம்சாரம் அங்கு வந்திருந்த ஸ்ரீவாதிராஜரின் மகாமகிமையைக் கேட்டிருந்ததால் அவருக்கு கருணை ஏற்படும்படி அழுது அவருடைய பாதத்தில் சரண மடைய, கருணா ஸமுத்திரரான ஸ்ரீவாதிராஜர் அவளிடம் மகிழ்ந்து ஸ்ரீஹயக்ரீவனின் பாதோதகத்தையும் ப்ரஸாதத்தையும் இவைகளை இறந்தவனின் வாயில் தடவும்படி அனுக்ரஹித்துத் தந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் தூங்கி எழுந்தவன்போல் உயிர் பெற்று பிழைத்து எழுந்தான். ஸ்ரீவாதிராஜரின் மிக்க பக்தனான விஜயநகர ராஜாவான அச்யுத தேவராயன் ஒரு ஸமயம் வயிற்றுவலியால் மிகவும் கஷ்டப்பட்டிருந்தான். அநேக வைத்தியர்கள் எவ்வளவோ சிகித்ஸை செய்து பார்த்தும் முடியாமல் இனி அவர் பிழைப்பதரிது என்று அபிப்பிராயப்பட்டனர். இதைக்கேட்டு ஸ்ரீவாதிராஜர் உடனே அரண் மனையில் அவரைப்போய் பார்க்கவும் அரசன் அன்ன ஆகாரமின்றி மிகவும் இளைத்துப்போய் சாகுந்தருவாயிலிருப்பதைப் பார்த்து கருணை காட்டி. சிறிது ஜலத்தை அபிமந்திருத்து அருந்தக்கொடுத்தார். உடனே அந்த உபாதி நீங்கி சிறிது நாளைக்கெல்லாம் முன்போல் அவ்வரசன் திடகாத்திரனாய் ஆனான். ஸ்ரீவாதிராஜரின் மகாமகிமையை அறிந்து அவரிடம் பன்மடங்காய் பக்திகாட்டினான். ஸ்ரீவாதிராஜ

ருக்கு ஏராளமான பொருட்களைத்தந்தான். பரமலோபியான ஓர் பிராம்மணனுக்கு ஸ்ரீவாதிராஜர் தன் ஹயக்ரீவமூர்த்தி ஸாலக்ராமத்தைக்கொடுத்து அதை தினம் பூஜித்துவரும்படிச் சொல்ல அதன் மகிமையால் அவனுடைய லோபபுத்தி நீங்கி பிராம்மணர்களுக்கு ஏதேச்சமாய் தியாகம் செய்ய ஆரம்பித்தான். முடிவில் அவன் பகவானிடம் விசேஷபக்தியைப்பெற்று பகவானுடைய அனுக்ரஹத்திற்கு முக்யபாத்ரனாகி வைகுண்டாதாஸர் என்று பெயர் பெற்றான். ஓர் ஊரில் ஓர் பண்டிதர் வாதத்தில் தனக்கு நிகரில்லை என்று படாடோபம் செய்துகொண்டு ஜனங்களைக்கூட்டிக்கொண்டு ஸ்ரீவாதிராஜரிடம் வாதத்திற்கு வந்துசேர, அங்கிருந்த மூடனொருவனை தன் அபார சக்தியால் அந்த பண்டிதனுடன் வாதாடும்படி செய்து பண்டிதனை தோற்கடித்து. தன் மகிமையை விளக்கினார். கிரி என்றவரொருவர் குஷ்டரோகத்தால் வருந்தி எவ்வளவோ தீர்த்த க்ஷேத்திரங்கள் சென்றும் அது நிவிருத்தியாகாமல் ஸ்ரீவாதிராஜரை சரணமடைய ஸ்ரீவாதிராஜர் அவரிடம் கருணை அடைந்து ஓர் யந்திரத்தைக்கட்டினார். அதனால் அவருடைய பலிஷ்டமான உபாதி நீங்கியதுமல்லாமல் சந்ததியும் ஏற்பட்டது. மற்றொரு குஷ்டரோகி தன் உபாதிக்கு யந்திரம் கட்டவேண்டுமென்று ஸ்ரீவாதிராஜரை பிரார்த்திக்க தன் காலுக்கு இட்டுக்கொண்டிருந்த மண்ணைக்கொடுத்து இதுதான் உனக்குயந்திரம். உன்உபாதி அனுகூலமாகும் போவென்றார். அப்படியே அந்த மண்ணைத்தடவ அந்த உபாதி நீங்கி அவன் சொஸ்தமானான். மகம்மதியனொருவன் வெகு நாளாய் தலைவலியாய் வருந்திக்கொண்டிருக்க ஸ்ரீவாதிராஜரின் கால்மண்ணை நெற்றியில் தடவிக்கொண்டதாலேயே அவனுடைய தலைவலி நீங்கியது. லிங்காயதனொருவன் ஓர் பலிஷ்டமான உபாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டு அது தீர ஸ்ரீவாதிராஜரை சரணமடைய, ஸ்ரீவாதிராஜர் தான் ஸ்நானம் செய்யும்பொழுது வெளியில் ஓடும் ஜலத்தை பிடித்து வைத்திருந்து அதைக் குடித்து வந்தால் அந்த உபாதி நீங்குமென்று அறிவிக்க, அவன் அவ்வாறே செய்து சொஸ்தமானான். ஸ்ரீவாதிராஜர் சாப்பிட்டு மீந்த உச்சிஷ்ட அன்னம் மகாப்ரஸாதமென்று திடபக்திக்கொண்டு அதை உட்கொண்டஒருவருக்கு அவருக்கிருந்த பலிஷ்டமான வியாதி நீங்கியது. ஸ்ரீதன் என்ற ஓர் அத்வைத பண்டிதர் ஸ்ரீவாதிராஜருடன் வாதாடி தோற்றுப்போய் அவரிடமிருந்து ஸ்ரீமத்வஸித்தாந்தத்தின் பெருமையை அறிந்து மனமகிழ்ந்து அவரிடம் மந்திரோபதேசம் பெற்று மாத்வர் ஆகி மாத்வ கன்னிகையை மணந்து ஸ்ரீவாதிராஜரின் முக்ய



சிஷ்யரானார். ஸ்ரீவாதிராஜரின் சிஷ்யரொருவர் தனக்கு கடன் அதிகமாய் போய்விட்டதாயும் அது நீங்க உபாயம் சொல்லும்படியாயும் வெகு நாளாய் பலவாறு பிரார்த்தித்திருந்தார். ஒரு ஸமயம் ஸ்ரீவாதிராஜர் யாஸாங்கந்தாஸ்ய நாஸாதி என்ற துவக்கமுள்ள ஸ்ரீலக்ஷ்மீ ஸ்தோத்திரத்தை இயற்றி மகாலட்சுமியை துதித்து ஸ்வர்ண விருஷ்டி ஏற்படும்படி செய்தார். அந்த சிஷ்யர் அதைக்கண்டு ஆச்சரியப்பட ஸ்ரீவாதிராஜர் அந்த மகோராக்களை எடுத்துக்கொள்ளும்படி அனுமதித்தார். அதனால் வந்த பணம் அவருடைய கடனை தீர்க்க போதுமான வளவே இருந்ததைப்பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். அந்த சிஷ்யன் தன் கடனை எல்லாம் தீர்த்து ஸ்ரீவாதிராஜன் முக்ய பக்தனானான். ஸ்ரீவாதிராஜர் அழகிய அரண்யத்தைக்கண்டால் அங்கு சிறிது காலம் தவம் செய்வார். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் ஓர் அரண்யத்தில் அவர் தபஸ் செய்திருக்கையில் ஓர் பெரிய கிருஷ்ணஸர்பம் தலைமுதல் சிரஸ்ஸுவரையில் சுற்றிக்கொண்டு பலமாய் கடிக்கவும் அதனால் சிறிதும் அவருக்கு விஷபாதை ஏற்படவில்லை. ஸர்பத்தின் பற்கள் உதிர்ந்துபோய் அது தானாக விலகி சென்றது. ஸ்ரீவாதிராஜரின் சமாதி இதனால் கொஞ்சமேனும் கலையவில்லை. (தொடரும்)

---

# மகாலட்சுமி.

(முன் 216-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமத்பாகவதாதிகளில் இவ்வாறு ஸ்பஷ்டமாய் மகாலட்சுமி விஷ்ணுக்கு குறைந்தவள் என்று சொல்லியிருக்கையில், விசிஷ்டாத்வைதிகளாகிய ஸ்ரீராமானுஜ மதத்தார்கள் மகாலட்சுமி விஷ்ணுக்கு குறைந்தவளல்லவென்றும் ஸமானமானவள்தானென்றும், உறுதி கூறுகின்றனர். அவள் பகவானுக்கு ஸமானமானவள் என்பதற்கு "ஸர்வாயதனா, ஸர்வகாலா, ஸர்வேச்சா, ஸர்வக்ஞானபத்தானபந்திகா ஸைஷாப்ரகிருதி: அவிகிருதி:" என்றும்; "த்வாவேதௌ, அநாதிநித்யௌ: அநாதியுக்தௌ, நித்யமுக்தௌ" முதலான சுருதிக்களையும் ஸ்மிருதிவசனங்களையும் ஆதாரமாக எடுக்கின்றனர். பகவான் ஈசன் எப்படியோ அப்படித்தான் மகா

லட்மியும் ஈசகோடியில் சேர்ந்தவளென்றும் பிரம்மாதி எல்லா ஜகத்தும் ஈசனால் ஆளப்பட்டு ஈசிதவ்யர்களாயிருப்பதால் அவர்களின் தாயான மகாலட்சுமியை ஈசகோடியில் சேர்த்துப் பேசாமல் ஈசுவரனுக்கு அடங்கிய ஈசிதவ்யள் என்று சொல்லும் பக்ஷத்தில் ஈசிதவ்யர்களான பிரம்மாதிகளுக்கும் அவர்களின் தாயான மகாலட்சுமிக்கும் யாதொரு வித்யாசமில்லாமல் போய் யுக்திக்கு விரோதமாகுமென்றும் கக்ஷி பேசுகின்றனர். ஆதலால் தான் ஸ்ரீ வேதாந்த தேசிகர் தம்பதீதைவதம்ந: என்று லக்ஷ்மீ நாராயணரை ஒரே ஈசனைச் சொல்லியிருப்பதாய் எடுத்துக்காட்டுகின்றனர். இந்த வாதத்தை நம்மவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. பகவானான விஷ்ணுக்கு மகாலட்சுமி தாழ்ந்தவள் என்பதற்கு ஆயிரக்கணக்கான பிரமாணங்களிருக்கின்றன. இந்த நிரூபத்தின் துவக்கத்தில் இதுவிஷயமாய் ஸ்ரீவாதிராஜர் ஸரஸபாரதியில் வெகு அழகாய் விளக்கியிருப்பதை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. மேலும் அம்பரணி சூக்தத்தில் மகாலட்சுமியே சொல்லிக்கொள்வதாவது :— "யம்காமயேதம் தமுக்ரம் கிருணோமிதம் பிரம்மாணம் தம் ரிஷிம் தம் ஸுமேதாம்। அஹம்ருத்ராய தனுராதனோமி ப்ரம்மத்விஷேசரவேஹந்தவாவு" யாரை ருத்திரனைச் செய்ய விரும்புகிறேனோ அவரை நான் ருத்திரனைச்செய்கிறேன். யாரை ப்ரம்மாவாய்ச் செய்ய விரும்புகிறேனோ அவரை ப்ரம்மாவாய்ச்செய்கிறேன். யாரை ஞானியாக்க விரும்புகிறேனோ அவரை ஞானியாக்குகிறேன். யாரை நல்ல புத்தியுள்ளவனைச் செய்யவிரும்புகிறேனோ அவரை நல்ல புத்தியுள்ளவனைச் செய்கிறேன். ஸம்ஹார காலத்தில் பிராம்மணாதி ஸமஸ்த ப்ராணிகளையும் துவேஷிப்பவனையும் பிரம்மாவின் ஐந்தாவது சிரஸ்ஸை வெட்டியதால் பிரம்மத்வேஷியாயும் ஹிம்ஸிப்பவனையுமுள்ள ருத்திரனைக் கொல்வதற்காகவே நான் தனுஸ்ஸை எடுக்கிறேன். என்றிவ்வாறு மகாலட்சுமி தன் மகிமையைச் சொல்லிக்கொண்டு, "அஹம்ஸுவே பிதாம்அஸ்யமூர்த்தன், மமயோனிரப்ஸ்வாந்தஸ் ஸமுத்ரே" இந்த ஜகத்தின் தந்தையான ஹிரண்ய கர்ப்பனை நான் பெற்றேன். எனக்கு காரணனாயிருப்பவர் சமுத்ரத்தின் ஜலத்தினுள்ளே இருக்கிறார். அவர் எப்பேர்ப்பட்டவரென்றால்,



'பரோதிவா பர ஏனாப்ருதிவ்யை। தாவதீ மகினாஸம்பூவ॥' த்யோலோகத்தினின்றும் அல்லது ஸ்ரீ தேவியினின்றும் உத்தமன். இந்த பூமியினின்றும்கூட உத்தமர். இந்த மகிமையால் நான் இப்பேர்ப்பட்டவளாயிருக்கிறேன். என்று தன் மகிமை இவ்வளவுதான் என்று தன் மகிமை பரிமிதமானதாய் அறிவித்து தன் காரணமாயிருப்பவனின் மகிமை பரமானது என்று மட்டில் சொல்லி அபரிமிதமானதென்றறிவித்திருக்கிறாள். ஸமுத்ரத்தின் ஜலத்தினுள்ளே இருப்பவன் நாராயணன் என்பதில் சந்தேகமில்லை, ஸமுத்திரத்திலுள்ளேயிருப்பவராய் சொல்லப்பட்டிருப்பவர் ஸ்ரீ நாராயணர் என்ற விஷயத்தில் பல பிரமாணங்களிருக்கின்றன. "யமந்தஸ் ஸமுத்ரே கவயோவயந்தி யதக்ஷரே பரமே ப்ரஜா:। யத: ப்ரஸூதா ஜகத: ப்ரஸூதி: தோயேன ஜீவான் வ்யஸஸர்ஜபூம்யாம்" ஞானிகள் ஸமுத்ரத்திலுள்ளே இருப்பவனைப்ரம்மமென்று சொல்கின்றனர். நாசமற்றவரான அந்த ப்ரம்மத்தினிடம் பிரஜைகள் அதீனர்களாய் இருக்கின்றனர். ஜகஜ்ஜனனீயான மகாலட்சுமி எந்த ப்ரம்மத்தினிடமிருந்து பிறந்தாளோ என்றால் பராதீனத்தன்மையை அடைந்தாளோ எந்த ப்ரம்மம் தன் வீரியத்தால் பிருதிவி முதலான லோகங்களில் ஜீவர்களை சிருஷ்டி செய்தானோ என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்டிருக்கும் ப்ரம்மமென்ற சப்தம் விஷ்ணுவைக்குறிக்கிறது. ஏனெனில் "அஜஸ்ய நாபாவத்யேகமர்பிதம் யஸ்மின்விச்வாபுவனாநிதஸ்து:" என்றும் வேதம் கூறுகின்றது. இதன் அர்த்தமாவது, பிறப்பற்றவரான பகவானுடையநாபியில் ஓர்வஸ்து உண்டாயிற்று. அந்த வஸ்துவிடம் பதினான்கு லோகங்களும் இருந்தன. மேலும் "அந்தஸ்ஸமுத்ரே மனஸாசரந்தம் ப்ரம்மான்வவிந்தத்தசஹோதாரமர்ணே" (ப்ரம்மா)சதுர்முகன் (ஸமுத்ரே) ப்ரளய ஸமுத்ரத்தில் அல்லது க்ஷீராப்தியில் (அந்த: அர்ணே) ஜலத்திற்குள் (மனஸா) சுயேச்சையுடன் (சரந்தம்) சஞ்சரிப்பவனை (தசஹோதாரம்) பத்து இந்திரியங்களை ப்ரேரிப்பவனைய் (அன்வவிந்தத்) அறிந்துகொண்டான், என்றும் மேலும்'ஸமுத்ரேந்த:கவயோ, விசக்ஷதே மரீசினாம் பதமிச்சந்திவேதஸ:'(கவய:)ஞானிகள்(ஸமுத்ரே அந்த:)ப்ரளய சமுத்ரம் க்ஷீரசமுத்ரம் இவைகளுக்குள்ளிருப்ப

பவனை (விசக்ஷதே) அறிகின்றனர். (வேதஸ:) முன்னே இருந்த இப்போது இருக்கும், இனி இருக்கப்போகும், அனேககோடி ப்ரம்மர்கள் (மரீசினும்) ஜீவர்களின் (பதம்) ஆசிரயமாய் (இச்சந்தி)ப்ரார்த்திக்கின்றனர் என்றும். 'யஸ்யாண்டகோசம் சுஷ்மமாஹு:' கவிகள் ப்ரம்மாண்டமாகிய ஸ்தானத்தை யாருடைய வீரியமென்று சொல்கின்றனரோ என்றும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்காந்தபுராணத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:— அஜஸ்யயா பாவிதியஸ்யநாபே: அபூச்ச்ருதே: புஷ்கரம் லோகஸாரம்| தஸ்மை நமோ வ்யஸ்தஸமஸ்த விச்வவிபூதயே லோககர்த்ரே || எந்த அஜனுடைய நாபியினின்றும் லோகத்திற்கு ஆதாரமான பத்மம் பிறந்ததோ, ஜீவாதிகளில் விஸ்தாரமாயும் ஸமஸ்தமான ஜடத்தில் ஸம்க்ஷிப்தமாயும் இருக்கும் ஜகத்தின் சிருஷ்டியாதிகள் உள்ளவனாயும் லோகஸ்வாமியாயுமிருக்குமந்த பகவானுக்கு நமஸ்காரம். மேலும் வியாஸஸ்மிருதியில் ஸோபித்யாய சரீராத்ஸ்வாத்சிஸிருக்ஷு: விவிதா:ப்ரஜா: ஏ அதவஸஸர்ஜாதௌ தாஸுவீர்யமவாஸிருஜத்| ததண்டமபவத்ஹைமம் ஸஹஸ்ராம்சுஸமப்ரபம் | யஸ்மின்ஜக்ஞே ஸ்வயம் ப்ரம்மா ஸர்வலோக பிதாமஹ:| ஆபோநாரா இதிப்ரோக்தா: ஆபோவை நரஸூனவ:| அயனம் தஸ்யதா: பூர்வம் தேண நாராயண: ஸ்மிருத:|| என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் தாத்பரியமாவது அந்த வாஸுதேவனிடமிருந்து பிறந்த விஷ்ணு தன் சரீரத்தால் பலவகை ப்ரஜைகளை சிருஷ்டி செய்ய யோசித்து பிரம்மாண்டத்தின் சிருஷ்டியின் முன்பே ப்ரம்மாண்டத்திற்கு ஆவரணமாயுள்ள ஜகத்தை சிருஷ்டி செய்தார். அந்த ஜலத்தில் மாயை மூலமாய் தன் வீரியத்தை வைத்தார். அந்த வீரியம் ஸுவர்ணாத்மகமாயும் சூரியனுக்கு ஸமானமான பிரகாசமுள்ளதாயும் இருக்கும் பிரம்மாண்டமாய் ஆயிற்று. அங்கு ஸர்வலோகத்திற்கும் பிதாமகனான சதுர்முகன் ஸ்வதந்திரனான ஹரியிடமிருந்து பிறந்ததால் ஜலத்திற்கு நாரம் என்று பெயர். ப்ரளய காலத்தில் அது அந்த விஷ்ணுக்கு ஆசிரயமானது. ஆகையால் அந்த விஷ்ணு நாராயணன் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறான்.

[தொடரும்]



# விதவா விவாஹ கண்டனம்.

(முன் 234-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆதலால் ஓர் ஸ்திரீக்கு ஒரு பதிதான் எந்த சந்தர்ப்பத்திலும் இருப்பது உத்தம பக்ஷமென்றும், ஸப்தபதி ஆவதற்கு முன்பு இரண்டாம் பதியை அவள் அடைவது மத்யமமென்றும் சித்தமாகிறது. ஸப்தபதி முடிந்த ஸ்திரீக்கு புனர்விவாகம் தகாதென்று அனேக பிரமாணங்கள் காணப்படுகின்றன. அவைகளை பின்னடி எடுத்துக்காட்டுகிறோம். ஸப்தபதியை நிறைவேற்றியிருந்தாலும் மேற்கண்ட இந்த ஸந்தர்ப்பங்களில் ஸ்திரீகளுக்கு புனர் விவாகம் உண்டென்று ஸ்பஷ்டமாய் காட்டும் பிரமாணங்கள் காணப்படுவதில்லை; விதவா விவாகவாதிகளும் இதுவரை எடுத்துக்காட்டவில்லை. ஆகவே விதவாவிவாகவாதிகள் தங்களுக்கு ஸாதகமாய்க் கொண்டாடும் பிரமாணங்களெல்லாம் ஸப்தபதி நிறைவேற்றாத ஸ்திரீயின் புனர் விவாகத்திற்குத்தான் ஆதாரங்களென்று நிரூபிக்கிறோமாதலால் இந்த சுலோகமும் ஸப்தபதியை நிறைவேற்றாத ஸ்திரீயின் புனர் விவாகத்திற்கு சந்தர்ப்பங்களை அறிவிப்பதாய் அர்த்தம் செய்யவேண்டியதவசியமாகும்.

அப்பொழுது இந்த சுலோகத்திற்கு என்ன அர்த்தமாகிறதென்றால் வாக்தானம், மனோதானம், உதகதானம் கங்கணபந்தனம் பாணிக்ரஹணம் ஸப்தபதி முதலிய கர்மங்களில் எவ்வளவு கர்மங்களும் நடந்து, ஸப்தபதிமட்டில் நிறைவேறாததற்கு முன்பு, வாக்தானம் முதலிய இந்த கர்மங்களை செய்துகொண்டபதி கண்ணுக்குப்படாமல் போய்விட்டாலும், இறந்துபோனாலும், ஸன்யாஸியாய்போனாலும், எந்த வகை நபும்ஸகனென்று ஏற்பட்டாலும், ஜாதிப்ரஷ்டனாய்ப் போனாலும், அவள் வேறொருபதியை விவாகம் செய்து கொள்ளலாமென்றும், அது சாஸ்திர ஸம்மதமென்றும் மனு சொல்வதாய் பாராசரமாதவீயம் அபிப்பிராயப்படுவதாய் அர்த்தமாகிறது. அவ்வாறு அர்த்தம் செய்வது இதர பிரமாணங்களை அனுசரித்திருப்பதால் சாஸ்திர ஸம்மதமும் ஆகும். சிஷ்டாசாரத்திற்கும் விரோதமில்லை. இந்த சுலோகத்திலுள்ள நஷ்டே என்பதற்கு பர்த்தா பன்னிரண்டு வருஷ காலம் காணாமற்போய்விட்டால் என்று வேறு பிரமாணங்களைக்கொண்டு அர்த்தத்தை அத்யாஹாரம் செய்வதுபோல், பதி என்ற பதத்திற்கும் ஸப்தபதி நிறைவேற்றிக் கொள்ளாதவன் என்று இதர பிரமாணங்களின் பலத்தைக்கொண்டு அத்யாஹாரம் செய்வது சரியான யுக்தியும் ஆகும்.

கலியுகத்திற்கு ஏற்றது பாராசர ஸ்மிருதிதான் என்றும் அதில் விதவா விவாகத்திற்கு சாதகமிருப்பதால் அவ்வாறு செய்வதுதான் சாஸ்திரவிதி என்றும் விதவாவிவாக வாதிகள் கூஷி பேசுகின்றனர். புராசரஸ்மிருதிதான் கலியுகத்திற்கு உகந்தஸ்மிருதி என்று சொல்லிவிட்டால், ஜாதகர்மம் நாமகரணம் முதலான ஸம்ஸ்காரங்களைப்பற்றி பராசரஸ்மிருதியில் பிரஸ்தாபமே இல்லாததால் இந்த ஸம்ஸ்காரங்களை கலியுகத்தில் நாம் செய்துகொள்ளாமலிருக்க நேரிடும். மற்ற ஸ்மிருதிகர்த்தாக்களைப்போல் யுகாந்தர தர்மங்களையும் பாராசரர் தன் ஸ்மிருதியில் கூறியிருப்பதால் இந்த பாராசர ஸ்மிருதி கலியுகத்திற்காகமட்டுமே ஏற்பட்டதென்று சொல்ல இடமில்லை. ஆதலால்தான் இந்த சுலோகத்தை யுகாந்திர தர்மமென்று தர்ம சாஸ்திர கர்த்தாக்களில் சிலர் பராசர மாதவீயம் முதலிய நூல்களில் அபிப்பிராயம் தந்திருக்கின்றனர். மற்றும் பலர் விதவாவிவாகம் எப்பவும் அனுஷ்டானத்திலிருந்ததில்லை என்று அடியிற்கண்ட ஸ்மிருதிகளை ஆதாரமாகக்கூறுகின்றனர்.

“விதவோத்வாஹநம் கர்ம சதுர்யுக ஸஹஸ்ரகே। நகர்தவ்யம் நகர்தவ்யம் ரிஷய: ப்ரவதந்திஹி॥ தேஷாம் ப்ரமாணம் ஹித்வாது ரௌரவம் நகரம் வ்ரஜேத்॥” விதவாவிவாகமாகிய கர்மா சதுர்யுகம் ஆயிரம் ஆயினும் செய்யத்தகுந்ததல்ல என்றும் பன்முறை மகரிஷிகள் வற்புறுத்துகின்றனர். அவர்களுடைய பிரமாணத்தை மீறி நடந்தால் ரௌரவமென்ற நரகத்தையே அடையவேண்டும். “மேலும் பாராசரர் பதௌ என்ற பதத்தால் ஸப்தபதி கர்மம் நிறைவேறாது வாக்தானம் முதலியவைகளைப் பெற்ற பதியையே கருதியிருப்பார் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. இச்சபையே இந்த சுலோகத்தை மனு வாக்யமென்று ஒப்புக்கொண்டிருப்பதால் பாராசரும் அதைத்தான் உதாஹரணம் செய்திருக்கலாமென்று சொல்லலாம். இந்த சுலோகத்திற்கு அடுத்தாப்போல் சிறிது பேதத்துடன் மனுவாக்யத்தையே உதாஹரணம் செய்திருக்கிறார். “மிருதே பர்தரி ஸாத்வீஸ்திரீ ப்ரம்மசர்ய வ்ரதேஸ்திதா। ஸாமிருதா லபதே ஸ்வர்கம்யதாதே ப்ரம்ஹசாரிண:॥” பர்த்தா இறந்தவுடன் பிரம்மசரிய விருதத்தை அனுஷ்டித்துக்கொண்டு அவள் இறந்தாளாகில், ப்ரம்மசாரி எவ்வாறு ஸ்வர்கத்தை அடைவானோ அவ்வாறே அவளும் ஸவர்கத்தை அடைகிறாள்.” பர்த்தாவிறந்தபின் ஸ்திரீ பிரம்மசரியத்திலிருக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதால் முந்தின சுலோகம் சப்த பதியை நிறைவேற்றிக்கொள்ளாத ஸ்திரீயைக் குறித்துத்தான் சொன்னதாய் ஏற்படுகிறது, பிரம்மசாரிணி இருக்கவேண்டிய விதிகளைப்பற்றி மனு சொல்லியிருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றுதான் பாராசரர் அதைப்பற்றி திருப்பிச் சொல்லாமல்



விட்டிருப்பதாய் எண்ணவேண்டும். மனுவோ விதவையாய்ப்போனவள் “நதுநாமாபிக்ருண்ஹீயாத் பத்யௌ ப்ரேதே பரஸ்யச” என்று பர்த்தா மரணமடைந்தபின் அன்னியனுடைய நாமாவைக்கூடச் சொல்லக்கூடாதென்று தடுத்திருக்கும்பொழுது பாராசரர் மனுவுக்கு விரோதமாய் இச்சபை வாதிக்கும் விதவாவிவாகத்தைக் கொஞ்சமேனும் தாங்கிப் பேசியிருக்கமாட்டார் என்பதை யோசிக்கவேண்டியதவசியமாகும். இவ்வாறு பலவகையாய் பரிசீலனை செய்தாலும் இந்த நஷ்டேமிருதே என்ற சுலோகம் விதவாவிவாக வாதிகள் சொல்லும் அர்த்தத்தைக் கொடுப்பதில்லை என்று நிச்சயமாய்ச்சொல்லலாம்.

(2) யதிஸா பாலவிதவா பலாத்யக்த்வாதவாக்வசித்। ததா பூயஸ்து ஸம்ஸ்கார் யாக்ருஹீத்வா யேனகேனசித்॥ இந்த பிரமாணம் ப்ராஜாபதி ஸ்மிருதியிலும் ப்ரம்மபுராணத்திலும் காணப்படுவதாயும் தம் வாதத்திற்கு 2, 3 பிரமாணங்களென்றும் விதவாவிவாக வாதிகள் கூறுகின்றனர். இதன் அர்த்தமாவது:— ஒருவள் பால விதவையாய்ப் போனாலும் சரி, அல்லது பர்த்தாவால் பலாத்காரமாய் தள்ளப்பட்டவளானாலும் சரி, அவள் மறுபடி வேறு எவனையாவது விவாகம் செய்துகொள்ளலாம்.” இதில் இந்தவிதி எந்த ஜாதியாருக்காக ஏற்பட்டதென்று தெரியவில்லை. சூத்ரஜாதிகளில் கட்டருப்பு ஜாதிகளென்று இருப்பதற்கும் தாழ்ந்த ஜாதியார்களில் நடந்தேறும் வழக்கத்திற்கும் இது பிரமாணமாயிருக்கலாம். மேலும் இது ப்ராம்மண ஜாதியாருக்காக ஏற்பட்டதென்றும் ஸப்தபதி நிறைவேற்றிக்கொண்ட விதவையைப் பொருந்தது என்றும் காட்டத்தகும் பதம் இந்த பிரமாணத்தில் காணப்படுவதில்லை. மேலும் இது ஸாவகாச பிரமாணமாயிருப்பதால் விதவாவிவாகம் கூடாதென்று காட்டும் பலிஷ்டமான நிரவகாச பிரமாணங்களுக்கு ஒத்ததாய் பிரமாணங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டியதவசியம். இந்த காரணங்களைக்கொண்டு இந்த பிரமாணம் விதவாவிவாக வாதிகளுக்கு ஆதாரமாகச் சொல்ல இடமில்லை.

(3,4) நஷ்டே மிருதேப்ரவ்ரஜிதேக்லீபே சபதிதேபதௌ। பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோ விதீயதே। மிருதேது தேவரே தேயாதஸ்யா பாவே யதேச்சயா। இது அக்னிபுராணவசனமென்று மூன்றாவது பிரமாணமாக கூறப்படுகிறது. பதி போனவிடம் தெரியாமற்போதல் பதி மரணமடைதல் சன்யாஸியாய் போதல் நபும்ஸகத்தன்மை ஜாதிப்ரஷ்டனாதல் இந்த ஐந்து ஆபத்துக்களிலும் ஸ்திரீகளுக்கு வேறு பதி உண்டு. பதி இறந்துபோனால் தேவரனுக்குக் கொடுக்கப்படவேண்டும். அவனில்லாவிடில் இஷ்டப்படி கொடுக்கப்படலாம் என்று இதன் பொருள். இந்த பிரமாணத்தையே மேலே முதலாவது பிரமாணமாய் விஸ்தாரமாய் விசாரம் செய்து விதவாவிவாகத்திற்கு சற்றும் ஆதாரமாக இல்லை என்று விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறபடியால் மீண்டும் இது விசாரம் செய்யத் தேவை இல்லை.

உ08725

(5) நிஸிருஷ்டோ ... வாபி யஸ்யா பர்த்தாம்ரியேதவா | ஸாசேத் அக்ஷதயோனிஸ்யாத் கதப்ரத்யாகதாபிவா | பௌனர்பவேன விதிநா புந: ஸம்ஸ்காரமர் ஹதி||" என்று போதாயன சாஸ்திரம் கூறுவதாயும் தமக்கு இது ஐந்தாவது பிரமாணமென்றும் இச்சபை கூறுகிறது. எவளொருவளுடைய புருஷனின் சமாசாரம் தெரியாமலிருக்கிறதோ எவளுடைய புருஷன் கொல்லப்பட்டானோ அல்லது தானாக இறந்தானோ அந்தஸ்திரீ, புருஷ சம்போகமடையாதவளாய் இருந்தாலும் சரி அல்லது தள்ளப்பட்டவளாயிருந்தாலும் சரி, புனர்புவனுக்கென்று விதிக்கப்பட்டிருக்கும் ஸம்ஸ்காரங்களால் விவாகம் செய்யப்படவேண்டும்." என்று அச்சபை மேற்கண்ட ஸ்மிருதிக்கு அர்த்தம் செய்திருப்பது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. புனஸ்ஸம்ஸ்காரமர்ஹதி புனர் விவாகத்திற்கு தகுதியுள்ளவளென்பதற்கு புனர் விவாகம் செய்யவேண்டுமென்று தப்பாய் அர்த்தம் செய்திருக்கிறது. கதப்ரத்யாத என்பதால் பதியை விட்டுச்சென்று மறுபடியும் பதியின் வீட்டுக்குத்திரும்பிவந்தவள் என்று ஸ்பஷ்டமாய் அர்த்தமாகும்பொழுது பதியால் தள்ளப்பட்டவர்களென்றே அர்த்தம் செய்யப்பட்டிருப்பது சரியானதல்ல. நிஸிருஷ்டாயாஹூதேபிவா என்ற பாடமும் இருப்பதாய் வைத்திருக்கும் தீக்ஷிதீயத்தால் தெரியவருகிறது. அதற்கு அப்பெண் உதகதாராபூர்வமாய் தானம் செய்யப்பட்டிருந்தபோதிலும் அல்லது விவாக ஹோமம் நடந்திருந்தாலும் என்று பொருள் உண்டாகிறது. அக்ஷதயோனி என்பதற்கு ப்ளோரடையாகாதவளென்றும் புருஷ ஸம்பந்தம் ஏற்படாதவளென்றும் இருவகையாயும் முன்னோர்கள் அர்த்தம் செய்திருப்பதாயும் முன்பு கூறப்பட்டிருக்கிறது. (தொடரும்.)

---

# ஸ்ரீமத்வ விஜயம்.

## ஐந்தாவது ஸர்க்கம்.

(முன் 241-ம் பக்கம் தொடர்ச்சி)

(5) ஆயினும் அப்படி பூர்ணப்ரக்ஞாசாரியார் கண்டனம் செய்த பிறகும் அந்த சிஷ்யர்கள் விவாதத்திற்கு விஷயமான இந்த உலகம் விவாதமில்லாமல் பொய் என்றே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதான சிப்பி முத்தைப்போல் திருச்யத்வ ஹேது பலத்தால் அதாவது கண்ணிற்படும் தன்மையுள்ளதால் பொய்



என்று வாதித்தார்கள். இதைக்கேட்ட ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் விவாதத்திற்கு விஷயமான ஜகத் அந்த திருச்யத்வஹேதுவாலேயே ஸத்யமாகும்; எப்படி என்றால் கடபடாதிகளில் கண்ணில் புலப்படுவது என்பது இருந்து வருகிறது; அவை ஸத்யமாகவே இருக்கின்றன; அதுபோல் இந்த ஜகத் கண்ணிற் புலப்படும் தன்மையைக்கொண்டிருப்பதால் ஸத்யமே ஆகிறது. என்று அனுமானம் சொல்லி அவர்களைக் கண்டித்தார். (6) திருச்யத்வ ஹேதுவைக்கொண்டு அதாவது கண்ணிற் புலப்படுவதைக்கொண்டு, தாங்கள் ஸத்யத்வத்தை ஸாதிப்பதாய் இருக்கும் பக்ஷத்தில், முத்துச்சிப்பியில் வெள்ளி கண்ணிற்கு புலப்படுவதால் அந்த சிப்பி வெள்ளிக்கும் தாங்கள் ஸத்யத்வத்தைச் சொல்லவேண்டியதாகும். ஆகையால் ஜகத்துக்கு ஸத்யத்வத்தைத் தாங்கள் ஸாதித்தது அயுக்தமே என்று சொல்லி, தாங்கள் ஆசாரியாளை வாதத்தில் ஜயித்துவிட்டதாய் அந்த சிஷ்யர்கள் சந்தோஷப்படவும், ஆசாரியாள் சிறிதும் மகிழ்ச்சி கொள்ளாமலேயே, கண்ணிற் புலப்படுவது என்பதாகிய ப்ரத்யக்ஷம் என்பது இந்திரியத்திற்கும் விஷயத்திற்குமுள்ள சம்பந்தமாகும். சிப்பியிலுள்ள வெள்ளியில் இது ஏற்படுவதில்லை. ஆனால் சிப்பியில்தான் ஏற்படுகிறது, ஆதலால் அந்த சிப்பிதான் ஸத்யமாகும். இதில் ஆக்ஷேபமில்லை, அதில் உள்ள வெள்ளி ப்ராந்தி பொய் என்று அறியப்படுகிறதாய் அனுபவத்திலிருக்கிறதால் சிப்பியிலுள்ள வெள்ளிக்கு திரிச்யத்வம் ஏற்படுவதில்லை. அதனால் அந்த சிப்பி வெள்ளி ஸத்யமாகாதென்று பதில் சொல்லி அந்த சிஷ்யர்களை ஜயித்தார். (7) விவாதத்திற்கு விஷயமாய் எந்தெந்த ப்ரமேயங்கள் ஏற்பட்டனவோ அவைகளின் ஸ்வரூபத்தின் உத்பத்தி விஷயத்திலேயும் அனுத்பத்தி விஷயத்திலேயும், ப்ரத்யக்ஷம் ஆகமம் இவைகளை ஸகாயமாய்க்கொள்ளாத கேவலமான அனுமானத்திற்கு அபிராமாண்யத்தை ஸாதித்து, பிரத்யக்ஷாதிகளின் பலத்தைக்கொண்ட அனுமானங்களை எடுத்துச் சொல்பவராய், ஆசாரியாள் சபைகளில் எல்லா பண்டிதர்களையும் ஜயித்து அனுமானதீர்த்தர் என்ற பெயர் பெற்றவராய் பிரஸித்தரானார். (8) வாதம் செய்வதில் ச்ரேஷ்டர்களான எல்லா

பண்டிதர்களான யாவர்களுக்கும் பராஜயமளித்துக்கொண்டு, தன்னுடன் வாதாடுவோரை உலகில் தேடிக்கிருந்துவந்த வேதத்வேஷியாய் பௌத்தமதத்தானான புத்திஸாகரபண்டிதன் வைசேஷிக மதத்து மகாபண்டிதனான வாதிஸிம்ஹன் என்பவருடன் ஸ்ரீ அச்யுதப்ரேக்ஷதீர்த்தரின் சமீபம் வந்துசேர்ந்தான். (9) தானே மகா பண்டிதனென்றும் தனக்கு நிகர் ஒருவருமில்லை என்றும் மகா துரஹங்காரியான அந்த புத்திஸாகரனை ஜயித்துவிடவேண்டுமென்று இச்சைப்பட்டு அச்யுதப்ரேக்ஷர் அதி சீக்கிரமே வேறொருமடமாகிய அம்பராத்தூளியிலிருந்து ஸ்வபக்ஷமாகிய தன் சித்தாந்தத்தில் சதுரராயும் அதிதீக்ஷ்ண்பராயுமுள்ள ஆனந்த தீர்த்தராகிய பாணத்தை தன் சிஷ்யரின் கையால் எடுத்துக்கொண்டார். (10) மிக்க மேலான புத்தியுள்ள பூர்ணப்ரக்ஞாசாரியார் தன் குருவான அச்யுதப்ரேக்ஷரால் வரவழைக்கப்பட்டவராய், வேறொரு மடத்திலிருந்து வந்து, உடுபியில் உத்தமமான மடத்தில் வசித்து வந்த அச்யுதப்ரேக்ஷரின் சமீபம் வந்து, வாதாட வந்திருந்த புத்திசாகர பண்டிதன் ஜயிப்பானோ, அல்லது ஆசாரியார் ஜயிப்பாரோ என்று அறிய குதூஹலத்துடன் அவசரமாய் கூடியிருந்த திரளான ஜனக்கூட்டத்தைப்பார்த்து அச்யுதப்ரேக்ஷரை நமஸ்கரித்தார். (11) யுத்தத்தில் சதுரனாயிருப்பவன் தீக்ஷ்ண்யமான வேகமுள்ள சிறிய பாணத்தால் கதாயுதத்தை எப்படி பேதிப்பானோ, அப்படி அந்த பூர்ணப்ரக்ஞசாரியார் பதில் வாதம் செய்பவரால் சகிக்கமாளாததாயும் விரைவாயும் மிதமாயுள்ள பதில் வாக்யத்தால் மகத்வம் பொருந்தியதான வாதிஸிம்ஹனின் வசனத்தை பண்டிதர்களின் சமூகத்தின் நடுவில் அடுத்தடுத்து கண்டித்தார். (12) இவ்வாறு ஸ்ரீமத்வாசாரியார் தன் வாக்யத்தை கண்டித்த பிறகும் கூட அவருடைய ஆதிக்கத்தைப்பார்த்துப் பொறுக்காமல் அவர் சொன்ன அர்த்தத்தை உரத்த சப்தத்துடன் எல்லோரும் கேட்கும்படியாய் பதினெட்டு வகையாய் விகல்பம் செய்தான். அப்பொழுது அந்த சபையில் கூடியிருந்த ஜனங்கள் உலகத்தையே ஜயிக்கக்கூடியவரான ஆசா-



ரியார் வாதிஸிம்ஹனை ஜெயிப்பாரென்னும் விஷயத்தில் சம்சயப்பட்டனர். (13) பிறகு பூர்ணப்ரக்ஞாசாரியார் புன்சிறிப்புள்ள முகத்துடன் வாதிஸிம்ஹன் சொன்ன பதினெட்டு விகல்ப கோடிகளையும், இதரர்கள் நிராகரிக்க மாளாததான தோஷமற்ற பரமசுத்தமான வாக்யங்களால் கண்டித்து ஸாதுக்களுக்கு ஆசிரயமான ஸ்ரீஹரியின் சரணத்தை ஆசிரயித்தவராய், ப்ராணிகளுக்கு ஆசிரயமாயுள்ள விஷ்ணுபதமாகிய ஆகாயத்தை ஆசிரயித்த சூரியன், நிர்மலமாய் சுத்தமான தன் தேஜஸ்ஸால் அந்தகாரத்தை [illegible]ம் செய்து சோபிப்பதுபோல் சோபித்தார். (11) அகஸ்திய மாமுனி ஆழ்ந்ததாயும் கரைகடந்து பெருகியதாயும் அநேக நதிகளையும் திரஸ்காரம் செய்வதாயுள்ள ஸமுத்ரத்தை பானம் செய்து, அவனுடைய கர்வத்தை அடக்கி சாமானியனைச் செய்தது போல், இந்த பூர்ணப்ரக்ஞாசாரியாராகிய அகஸ்தியமுனிவர் ஆழ்ந்த யோசனையுள்ளவனையும் தனக்கு நிகர் யாருமில்லை என்று வரை கடந்து கர்விஷ்டனையும் ஸமஸ்த பண்டிதர்களின் வாக்ஸமூகங்களை நிராகரித்தவனையுமுள்ள புத்திஸாகரனென்ற பண்டிதனை ப்ரயாசையன்னியில் வாதிஸிம்ஹனை ஜயித்ததுபோல் அவனுடைய அஹங்காரத்தை கண்டித்து ஸாமானியனைச் செய்துவிட்டார். (15) இது சம்பந்தமான வாதம் நாளை நடக்கட்டுமென்று சொன்ன துஷ்டர்களான அந்த வாதிஸிம்ஹன் புத்திஸாகரன் இவர்களைப்பார்த்து, மத்வாசாரியார் "என் யுக்திகளுக்கு பதில் யுக்தி தோன்றினால் இப்போதே சொல்லுங்கள், தோன்றாவிட்டால் பதில் தோன்றாமல்போன காரணத்தை முன்னிட்டு நீங்கள் தோல்வியடைந்ததாகவே எண்ணக்கூடும்" என்று சொல்லவும், அவர்கள் பிறகும் மௌனமாய் இருந்து விட்டதைப்பார்த்துவிட்டு, யார் ஜெயிக்கிறார் என்று பார்ப்பதற்காககூடியிருந்த ஜனங்கள் அவ்விரு பண்டிதர்கள்தான் தோற்றுப்போனதாய் எண்ணினார்கள். அன்றிரவே அவ்விருவர்களும் அவ்வூரைவிட்டு ஓடிப்போனதிலிருந்து அவர்கள் தோற்றுப்போனதாய் எண்ணியிருந்ததை உறுதி செய்து கொண்டனர். (16) உலகத்தைச் சுற்றிவரும் புத்திஸாகரபண்டிதனாலும் வாதிஸிம்ஹனாலும் வெகுகாலமாய் ஸம்பாதித்திருந்தான இந்த ஜய லட்சுமியை

மத்வாசாரியார் இரண்டு நாழிகையிலேயே அநாயாஸமாய் கைக்கொண்டு விட்டார். இது ஓர் ஆச்சரியமே என்று அவ்வூர் ஜனங்கள் ஆச்சரியமடைந்தனர். (17) ஒரு சமயம் சங்கராசாரியாராகிய மணிமந்தன் இயற்றியதான பிரம்மஸூத்திர பாஷியத்தை விவரித்துச்சொல்லும்பொழுது, தர்கசாஸ்திரத்தில் சதுரர்களான பண்டித ஜனங்களால் சூழ்ந்திருந்த ஆனந்த தீர்த்தர், அதை பரிகாசம் செய்துகொண்டு தேவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் வார்த்தையைப்பேசினார். (18) ராகத்வேஷாதிகள் இல்லாத புத்தியுள்ளவர்கள் நரகாதி அநார்த்தங்களைக்கொடுப்பதான அந்த கிரந்தத்திலுள்ள இரகசியமான துரபிமானத்தைவிட்டு, நிர்தோஷமான ப்ரம்மஸூத்திரங்களின் அபிப்பிராயத்தையும், அந்த பிரம்மஸூத்திரத்தின் சங்கரபாஷியத்தின் அபிப்பிராயத்தையும், தனித்தனியே விசாரம் செய்யும் பக்ஷத்தில் இவ்விரண்டுக்கும் அந்யோந்யமாயுள்ள அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதான வ்யாக்யான வியாக்யேய ரூபமான ஸம்பந்தத்தைக் காணமாட்டார்கள். ஸ்ரீவேதவியாஸர் இயற்றியுள்ள பிரம்மஸூத்திரங்களில் விஷ்ணுவுக்கு அநந்தகுண பரிபூர்ணத்தன்மையும், தோஷமில்லாதிருப்பதும், சேதநா சேதநாத்மகமான எல்லாபிரபஞ்சத்திற்கு விலக்ஷணமாயிருத்தலும், பரம முக்ய விருத்தியால் ஸமஸ்த பேதங்களால் சொல்லப்படும் தன்மையும், முக்தியில் எல்லா ஜீவர்களுக்கும் நியாமகத்தன்மையும், பிரபஞ்சத்தின் ஸத்யத்தன்மையும், இவை முதலான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சங்கராசாரியார் இயற்றியுள்ள இந்த பாஷியத்திலோ விஷ்ணுவுக்கு நிர்குணத்தன்மையும், அவர் ஜீவனைவிட தனிப்பட்டவரென்ற என்று சொல்வதால் ஸமஸ்த தோஷங்களுக்குப் பாத்திரமாயிருத்தலும், ஸர்வ சப்தங்களாலும் வாச்யமாயில்லாதிருத்தலும், பிரபஞ்சத்தின் மித்யாத்துவமும், முக்தியில் ஜீவர்களின் ப ப்ரம்மத்துடன் ஐக்யமும், ஆகிய இவை முதலான ஸூத் விருத்தமான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படியிருக்க இத்தகைய சங்கரபாஷியத்தில் பொதுஜனங்களுக்கு பிராமாண்ய புத்தி ஏற்பட்டிருப்பது ஆச்சரியமே. (தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் 245-ம் பக்கம் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பு ராவ் M.A., எழுதுவதாவது:—

இவ்வாறு பரிசீலனை செய்தால் அத்வைதமதத்தை அவலம்பிப்பவர்கள் ஸத்யவந்தர்களாயிருந்தால் மரம்போல் நிஸ்சலபாவத்தை அடைந்தவர்களாய் கர்மாதிகளை விட்டுவிடவேண்டும். அத்வைத தத்வத்தை [illegible]க்கொண்டுவிட்டு கர்மாதிகளில் பிரவிருத்தித்திருப்பது அவர்களின் ஞானமார்க்கத்திலுள்ள பேடித்தன்மையையோ அல்லது அவர்களுடைய குருவின் வாக்யத்தில் திருடமான நம்பிக்கையில்லாததையோ விளக்கிக் காட்டுகிறது. சார்வாகன் தர்மாதிகளான இந்திரியங்களுக்கெட்டாத வஸ்துக்கள் இருப்பதாய் அறிவிக்கும் ஞானம் பிரமம் என்று சொன்னான். அதற்கே நாமெல்லோரும் அவனைக்கண்டு சிரித்தோம். சங்கராசாரியார் ஈசுவரன் என்ன, வேதமென்ன, ஸ்வர்க்க நரகாதிகள் என்ன, கடபடாதி ப்ரத்யக்ஷ ஸித்தமான ஜகத் என்ன, இவைகளெல்லாம் இருப்பதாய் அறிவிக்கும் எல்லா க்ஞானமும் ப்ரமமென்று தங்குதடையின்றி நிஸ்ஸம்சயமாய் சொல்லிவிட்டார். எதுவுமே உண்மையாய் இல்லவேயில்லை. எல்லாமே சிப்பி வெள்ளியைப்போல் பின்னுடியும் இருந்ததில்லை, தற்போதுமில்லை, இனியுமிருக்கப்போவதில்லை என்று சொன்னார். கண்ணிற் காணப்படாத வஸ்துக்கள் உண்மையல்லவென்று சார்வாகன் கக்ஷி பேசினான். கண்ணிற்குக் காணப்படுவதும் கூட பொய் என்று சித்தாந்தப்படுத்திய சங்கராசாரியாரின் பராக்கிரம லீலாவிலாஸம் மிகவும் மெச்சத்தகுந்ததுதான். சங்கராசாரியார் தத்வத்தை அபலாபம் செய்ததற்கும் ப்ரமாணத்தை அதிக்ரமித்ததற்கும் இதைவிட அதிகமான திருஷ்டாந்தம் ஏன்?

# அத்வைத மதத்தின் வஞ்சனைகள்.

'க்ரகசமிவசேதஸ: கஷ்டம் சாஸ்திரம்' என்று முன்னோர்கள் அத்வைத மதத்தின் கிரமத்தைப்பற்றி வர்ணித்திருக்கின்றனர். அத்வைத மதம் ஸாது ஜனங்களின் மனதை ரம்பம்போல் அறுக்கக்கூடியதாகும் என்று இதன் அர்த்தம். அத்வைதமதத்தை எடுத்துச் சொல்லும்

பொழுது சங்கராசாரியார் செய்த வஞ்சனைகளைப்போல் அவ்வளவு வஞ்சனைகளை கோகுலத்தில் ஸ்ரீகிருஷ்ணர் செய்யவில்லை. பிரசித்த திருடனான ஸ்ரீகிருஷ்ணர் செய்த வஞ்சனை கர்ம மார்க்கத்தின் வஞ்சனை. முடிவில் அது பக்தர்களின் கஷ்ட பரிகாரத்திற்கு காரணமாயிற்று. ஞான மார்க்கத்தில் சங்கராசாரியார் செய்த வஞ்சனைகள் அக்ஞானாந்தகாரத்திற்கு காரணமாயிருப்பதால் முடிவில் ஜனங்களுக்கு அந்தம் தமஸ்ஸு ஏற்பட காரணமாகிறது என்று அநேக சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்கள் அடுத்தடுத்துச் சொல்லுகின்றன. இந்த வஞ்சனைகளில் சிலவைகளை திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டுகிறேன்.

(1) சங்கராசாரியார் பரப்ரம்மம் நிர்குணன் என்றார். நிர்குணனாயிருப்பதால் அவன் நிஷ்கிரியன் (கிரியை இல்லாதவன்) அக்ஞேயன், (அறியப்படமுடியாதவன்) ஆகிறான். அப்படியிருக்க அவனுக்கு எந்த லக்ஷணங்களையும் சொல்லவேண்டியதில்லை. எந்த ப்ரமாணங்களாலும் அவன் சொல்லப்படுகிறவனாய் ஆகமாட்டான். லக்ஷணப்ரமாணாப்யாம் வஸ்து நிர்ணய: என்பது பெரியோர்களின் சொல். அதாவது ஓர் வஸ்து இருப்பதாய் அறியவேண்டுமானால் அதன் லக்ஷணங்களாலும் அதை ப்ரதிபாதனம் செய்யும் ப்ரமாணங்களாலும் அறியவேண்டுமென்று இதன் பொருள். அத்வைத மதத்தில் லக்ஷணத்தையும் ப்ரமாணத்தையும் ப்ரம்மத்தினிடம் சேர்த்துவைக்க அதாவது ஸமன்வயம் செய்ய இடமில்லையாகையால் இதற்கு மௌனமாயிருப்பதே உசிதமானது என்று சங்கராசாரியாருக்கு சந்தேகம் உண்டாயிற்று. அவ்வாறே சங்கராசாரியார் ஒவ்வொரு தடவையும் ஸ்பஷ்டமாய் கூறியிருக்கிறார், அவர் இயற்றியிருக்கும் பிரம்மஸூத்திர பாஷ்யத்திலேயும், சிஷ்யன் ப்ரம்மவிஷயகமான ப்ரமேயங்களை ப்ரச்னம் செய்தபொழுது ஸதூஷ்ணீம் பபூவ இந்த காரணத்தால்தான் குருவான சங்கராசாரியார் மௌனமாயிருந்தார் என்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச்சொன்ன சங்கராசாரியார் தான் ஸபாதலக்ஷ கிரந்தம் அதாவது ஒரு லக்ஷம் இருபத்தையாயிரம் கிரந்தங்களைக்கொண்ட நூல்களை இயற்றியிருக்கிறார். இவ்வளவு நூல்களை ப்ரம்ம ஞானம் ஏற்படுவதற்காகத்தானே அவர் எழுதியிருக்கிறார். இவ்வாறு இவர் செய்திருக்கும் காரியத்தால் ஸாது ஜனங்களுக்கு ஸந்தேகம் ஏற்பட்டு, யதார்த்தத்தை அறிய பரிசீலனை செய்பவர்களுக்கு மிக்க சங்கடமேற்படுகிறது. ப்ரம்மம் அக்ஞேயன் அறியப்படமுடியாதவனென்று சொல்லிவிட்டு அதற்காகவென்று அதாவது ப்ரம்ம விசாரத்திற்காகவென்று புறப்பட்டது அவர் செய்த முதலாவது வஞ்சனையாகும்.



(2) சாஸ்திரம் ப்ரம்மக்ஞானத்தை உண்டாக்குவதில்லை என்று அத்வைதிகள் சில இடங்களில் சொல்லியிருக்கின்றனர். அப்படியிருக்க ஒன்றேகால் லக்ஷம் கிரந்தங்களை இயற்றியது ஏனோ? தெருவாசல் குப்பையைக்கூட்டி குமிப்பதற்காகவென்று சொல்வார்கள். என்றால் ப்ரம்மவிஷயகமான அக்ஞானத்தைப் போக்குவதற்காக எழுதப்பட்டதே ஒழிய ப்ரம்மக்ஞானத்தை உண்டாக்குவதற்காக அல்லஎன்று சொல்லி பின்னிட்டு கண்ணில் மண்ணைத் தூர்க்கின்றனர். ப்ரம்ம விஷயகமான க்ஞானத்தால்தான் பிரம்ம விஷயகமான அக்ஞானம் நிவிருத்தியாக வேண்டும். படம் (துணி) விஷயகமான அக்ஞானம் கட (குடம்) விஷயகமான க்ஞானத்தால் நிவிருத்தியாகவேண்டும். குடும்ப விஷயமான அக்ஞானம் தபால் முதலியவைகளால் குடும்ப விஷயகமான க்ஞானம் ஏற்பட்டபிறகுதான் நிவிருத்தியாகவேண்டும். இவ்வாறு விசாரம் செய்தால் ப்ரம்மத்தின் க்ஞானம் வந்தேதீரும். அதாவது ப்ரம்மத்திற்கு க்ஞேயத்வம் வந்தேதீரும். சாஸ்திரத்திலோ ப்ரம்மம் அக்ஞேயன் என்று சங்கராசாரியார் சொல்லிவிட்டார்.

(3) ப்ரம்மம் க்ஞேயனானாலும் பாதகமில்லை என்று சிலசமயத்தில் சங்கராசாரியார் நிரூபணம் செய்திருக்கிறார். இதைப் பார்த்துவிட்டு ஜனங்கள் திண்டுமுண்டாடுகிறார்கள். சங்கராசாரியார் சொல்வதாவது: ப்ரம்மம் அக்ஞேயனும் ஆகலாம், க்ஞேயனும் ஆகலாம். ஆனால் பரஸ்பர விரோதம் உண்டாவதில்லை என்கிறார். "அவர் புத்திமான். நாம் மூடர்கள். எங்களுக்கு என்ன தெரிகிறது. நாம் அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு சும்மாயிருக்கவேண்டுமென்றுதான் என்று சொல்லிவிட்டு ஜனங்கள் போய்விடுகின்றனர். உண்மையாகப்பார்த்தால் இது ஓர் பெரிய வஞ்சனையே. உன் ஸம்ஸாரம் அழகாய் இல்லை குரூபி என்று ஒருவர் சொன்னால் துக்கமுண்டாகிறது. ஸௌந்தரியமுள்ளவளாய் இருக்கிறாள் என்று அவர் சொல்லலாமென்றாலோ அது உண்மைக்குமாறாக இருக்கிறது. அதாவது வஸ்து தத்வத்திற்கு அனுகுணமாக இல்லை. அதற்காக அவர் உன்பத்னியிடம் ஸௌந்தரியம் ஆரோபிதமாக இருக்கிறது, அதாவது அவள் ஆரோபித ஸௌந்தரியமுள்ளவளாய் இருக்கிறாள் என்று நயமாய் சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். புத்திசாலியாய் இருப்பவன் இதைக்கேட்டுவிட்டு சந்தோஷப்படலாமா? ஆரோபித ஸௌந்திரியமென்றால் பொய் ஸௌந்தரியமென்று அர்த்தம். என்றால் குரூபி என்றுதானே அர்த்தம் அதுபோல் ப்ரம்மம் ஆரோபித க்ஞேயன் என்று சங்கராசாரியார் சொன்னதற்கு, அவன் பொய் க்ஞேயன் என்று

தானே அர்த்தம். அதனால் அவன் அக்ஞேயன் என்று தானே ஏற்ப கிறது. தன் ஆசாரியாள் செய்திருக்கும் இந்த வஞ்சனையை சிஷ்ய அறிவதற்குள்ளாக சங்கராசாரியார் கேதாரக்ஷேத்திரத்தின் குகைக்கு நுழைந்துவிடுகிறார். சிஷ்யன் சங்கடப்படுவதொன்றுதான் பாக்கிய கிறது. இதோர் வஞ்சனை.

(4) இப்படித்தான் ப்ரம்மம் அக்ரியன் என்று சங்கராசாரியா சொல்லியிருக்கிறார். அதாவது சிருஷ்டியாதி கிரியைகள் இல்லாதவ என்றார். இதைக் கேட்டுவிட்டு சிஷ்யன் அப்படியானால் பிரம்மத்தை தவிர்த்துள்ள சேதனர்கள் இல்லாமலே போவதால் சிருஷ்டி ஸ்தி ஸம்ஹாராதி காரியங்கள் பிரம்மத்துக்கு சேருவதில்லையே என் கஷ்டப்பட்டான். சங்கராசாரியார் ஆமாம். ப்ரம்மம் ஸக்ரியன் கிரியை உள்ளவன்தான். ஜன்மாத்யஸ்யத: என்று சொல்லப்பட்டிருக்கிறது ப்ரம்மன் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறான் என்று எடுத்து சொன்னார். இதைக் கேட்டவுடன் சிஷ்யன் தடுமாறி மூர்ச்சையா விழுந்தான். அதற்கு சங்கராசாரியார் பிரம்மன் கிரியையுள்ளவன் என் ால் ஆரோபிதமான கிரியையுள்ளவன் என்கிறேன் என்றார். உ பத்தினியாள் உனக்கு ஆரோபிதமான ஸேவையைச் செய்கிறாள் மிகவும் சந்தோஷம் என்று ஒருவன் ஒரு பெரிய மனுஷ்யனிடம் சொ னால் அவனுக்கு எவ்வளவு துக்கமுண்டாகுமோ, அதுபோல்தான் ப்ர மன் ஆரோபித சிருஷ்டியாதிகளை செய்கிறானென்றாலும் அவ்வள தான் ஏற்படுகிறது. உண்மையில் ப்ரம்மம் ஆரோபித க்ரியையுள்ள வன் என்றால் பொய் கிரியையுள்ளவனென்றாகும். அதாவது கிரியை யில்லாதவன் அக்ரியன் என்றுதான் ஏற்படுகிறது. இதன் தத்வத்தை அறியாத முட்டாள் ஜனங்களுக்கு சங்கராசாரியார் இந்த வார்த்தை யைச் சொன்னது ஓர் பெரிய வஜ்ஜிரத்தைக்கொடுத்ததாக எண்ண யிருக்கிறார். இது ஓர் உடைந்த இரும்பு வாளையே ஆகும். இது சங் ராசாரியார் செய்த நான்காவது வஞ்சனை.

(5) பிரம்ம நிர்குணன் என்று சொல்லிவிட்டு அதன் பிறகு ஆரோ பிதமான அனந்த குணங்களுள்ளவன் என்று சங்கராசாரியார் சொல் யிருக்கிறார். இந்த விஷயத்திலேயும் மேற்சொன்ன மோசத்தையே செய்திருக்கிறார். உன் ஸம்ஸாரம் நிர்குணமானவள் என்று சொல் விட்டு மனஸ்ஸமாதானத்திற்காக ஆரோபிதமான அநேக குணங்க நிறைந்தவள் என்று சொன்னதுபோலாகிறது. உண்மையில் ஆரோபி குணமுள்ளவன் நிர்குணன் என்றுதானே அர்த்தம். இது ஐந்தாவ வஞ்சனையாகும்.

(6) பொய் என்ற பொருளை அறிவிக்க பொய், அந்ருதம், மி ஷாமித்யா முதலான நான்கைந்து நாமங்கள் பிரஸித்தமாயிருக்கின்றன அத்வைதமதத்தில் சங்கராசாரியார் இந்த வார்த்தைக்கு ஓர் அரா மையே உண்டாக்கிக்கொண்டு சமயசந்தர்ப்பத்திற்கு தகுந்தபடி வெ வேறு பரியாய பதங்களை ப்ரயோகம் செய்து ஜனங்களின் கண்ணி மண்ணை வாரிப் போடுகிறார். (தொடரும்).



## ஸம்வத்ஸரப் பண்டிகை கொண்டாடவேண்டிய விதம்

1935-௵ ஏப்ரல்-மீ 4உ குருவாரம் இந்த பாவ ஸம்வத்ஸரத்தின் அடுத்தஸம்வத்ஸரமாகிய யுவஸம்வத்ஸரத்தின் ஆரம்பதினமாகும். அன்று காலையில் ஒவ்வொரு வீட்டிலும் த்வஜாரோபணம்செய்யவேண்டும். குருத்தோலை மாவிலை தோரணம் முதலியவை கட்டவேண்டும். அப்யங்கஸ்நானம் செய்யவேண்டும்; அன்று நல்லெண்ணையில் மகாலட்சுமியும் ஜலத்தில் கங்கையும் இருப்பதால் அலக்ஷ்மீ பரிகாரமாக அப்யங்கஸ்நானம் செய்ய வேண்டியதவசியமாகும். ஸம்வத்ஸர பண்டிகை, பலிப்ரதமை, வஸந்தாரம்பதினம், தீபாவளிப்பண்டிகை இத்யாதி தினங்களில் எண்ணை தேய்த்துக்கொள்ளாதவன் ரௌரவ நகரத்தை அடைவான் என்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மணர்களை வரவழைத்து அவர்களுடன் பகவத் ஆராதனையைச் செய்யவேண்டும். குரு ஜனங்கள் தன் ஸ்திரீ ஜனங்கள் குழந்தைகள் இவர்களுக்கு நூதன வஸ்திரங்கள் அலங்காராதிகள் கொடுத்து சந்தோஷப்படுத்தவேண்டும். ஜ்யோதிஷனை வரவழைத்து அவரை கந்த புஷ்பாதிகளால் பூஜித்து அவர் மூலமாய் பஞ்சாங்க சிரவணம் செய்யவேண்டும். அதனால் லாபமுண்டாகும். அன்று எண்ணெய்தேய்த்துக்கொண்டு, அமிர்தத்திலிருந்து கிளம்பிய வேப்ப மரத்தின் பூவோடுகூடிய தளிர்களை பக்ஷணம் செய்யவேண்டும். அதனால் வியாதி தொலைந்து ஸௌக்யம் வித்யை ஆயுஸ் ஸம்பத்து இவைகள் உண்டாகும். மிளகு காயம் உப்பு கடுகு உளுந்தம்பருப்பு சர்க்கரை புளிச்சாறு இவைகளுடன், புஷ்பங்களுள்ள வேப்பங் கொழுந்தை ஸம்வத்ஸராரம்பத்தில் பக்ஷணம் செய்வது அவசியமென்று ஒரு நூல் அறிவிக்கிறது. அன்று விக்னேஸ்வர பூஜை அவசியம். பிராம்மணர்களை பூஜித்து சக்திக்கு தகுந்தவாறு தானம் செய்ய வேண்டும். மிருஷ்டான்னம் போஜனம் செய்வித்து தானும் போஜனம் செய்யவேண்டும். வெகு சந்தோஷமாயிருக்கவேண்டும். பலவகையான பாட்டு, வாத்யம், புண்ய புருஷர்களைப்பற்றி புராண

ஹரிகதை முதலியவைகளை சிரவணம் செய்துகொண்டு அன்றைய பொழுதை போக்கவேண்டும். அன்று இரவு தன் தர்மபத்தினியுடன் ஆனந்தமாய் காலங்கழிக்கவேண்டும். இதனால் அந்த ஸம்வத்ஸரமுழுதும் அவ்வாறே ஆனந்தமாய் கழியும். அந்த ஸம்வத்ஸரத்திய அரசன் மந்திரி முதலானவர்கள் இன்னார்களென்பதை அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும். ராஜனின் பலனை கேட்டால் தன் மகத்வம் அசையாது. மந்திரி பலனைக்கேட்பதால் சாமர்த்தியமும், தான்யாதிபதியின் பலனைக்கேட்பதால் ஐசுவரியம் ஸ்திரமாயிருத்தலும் மேகாதிபதி பலனைக்கேட்பதால் ஸரஸமான வாக்கும், ரஸாதிபதியின் பலனைக்கேட்பதால் தர்மபுத்தி ஸ்திரமாயிருத்தலும், பஸ்சிமதான்யாதிபதியின் பலனைகேட்பதால் தீர்க்காயுஸ்ஸும் ஏற்படும். அந்த வருஷத்தியபலனை ஸம்வத்ஸர ஆரம்பதினத்தில் கேட்டால் துக்கமும், உபாதிகளும் தாரித்ரயமும் நீங்கி தான்யாதிகள் நிறைந்து ஆனந்தமடைவார்கள், ப்ரதிதினமும் பஞ்சாங்கச்சிரவணம் அவசியமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தந்ததினத்து திதியை சிரவணம் செய்தால் பூர்ணாயுஸ் இருக்கும் என்றும் நக்ஷத்திரத்தை சிரவணம் செய்வதால் பாபங்கள் தொலையுமென்றும், யோகத்தை சிரவணம் செய்தால் வியோகம் நிவிருத்தியாகுமென்றும், கரணத்தை சிரவணம் செய்தால் ஸர்வாபீஷ்டமும் உண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஸம்வத்ஸரத்திற்கு அரசன் பிரஹஸ்பதி, மந்திரி சனி, சேனாதிபதி சனி, பூர்வதான்யாதிபதி செவ்வாய், ஜலாதிபதி சனி தான்யாதிபதி சூரியன், விலைக்கு அதிபதி சனி, மேகாதிபதி சனி ரஸாதிபதி குரு, நீரஸாதிபதி செவ்வாய், கோசத்திற்கு செவ்வாயும், ஆக்ஞைக்கு சனியும், யுத்தத்திற்கு சனியும் வியவஹாரத்திற்கு புதனும், வியாபாரத்திற்கு சுக்ரனும், ப்ரதாபத்திற்கு சனியும், அசுவத்திற்கு குருவும், யானைக்குச் சனியும், பசுவுக்கு செவ்வாயும், தேவர்களுக்கு அங்காரகனும் மனுஷ்யர்களுக்கு அங்காரகனும், திரவியத்திற்கு சுக்ரனும், வஜ்ஜிரத்திற்கு புதனும், வருஷத்திற்கு சனியும், ஸர்பத்திற்கு சனியும், மிருகத்திற்கு சூரியனும், ஸ்திரீகளுக்கு சனியும், ரத்னத்திற்கு



செவ்வாயும், மாங்கல்யத்திற்கு குருவும் சம்பத்தத்திற்கும் குருவும் அதிபதியாவார்கள். மொத்தத்தில் இந்த ஸம்வத்ஸரம் நல்ல சுபகரமானது. ஸ்திரீ புருஷர்கள் ஸுகமாய் இருப்பார்கள். தேசம் ஸுபிக்ஷமாய் இருக்கும். நீர்வளம் நிலவளம் பொருந்கியிருக்கும். பாதி மழை என்றும் நெல்விலை அதிகமாகுமென்றும் சொல்லக் கூடும்.

## செய்தித்திரட்டு.

மதராஸைச்சேர்ந்த திருவல்லிக்கேணியில் ஸ்ரீமான்களான N. S. கிருஷ்ணராவ் பிரசிடெண்டாகவும் N ராமராவ் வைஸ் பிரசிடெண்டாகவும் அயாசிதம் ராகவேந்திராசாரியாரை காரியதரிசியாகவும் மற்றும் L. ராஜாராவ் முதலிய ஆறு பேர்களை கௌன்ஸிலர்களைக்கொண்டு ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் ஆராதனை முதலியவைகளை நடத்த ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீவியாஸ அஸோஸியேஷனின் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டில் அவர்களுக்கு உதவிய கனவான்களின் பெயரும் தொகையும் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் ரூ. 128-2-0 செலவாகியிருப்பதாயும் இவ்வருடமும் வழக்கப்படி நாளது மார்ச்சு-மீ 22, 23, 24, 25 உ களில் கங்கைகொண்டான் மண்டபத்தில் ஷை புண்ய தினம் ஸ்ரீமான் வய்யூர் ஸ்ரீனிவாஸாசாரியாரவர்களின் உபன்யாஸம் சந்தேக்கச்சேரி வீதி புறப்பாடு முதலியவைகளுடன் நடக்கப்போவதாயும் அச்சமயம் ஸ்ரீ ஸ்ரீமதுஸூதனதீர்த்தஸ்வாமிகள் விஜயம் செய்யப்போவதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வஸித்தாந்த சபையின் ஆதரவில் பிப்ரவரி 17, 24 உகளிலும் மார்ச்சு-மீ 3உயிலும் ஸ்ரீமான் யஜ்ஞநாதாசாரியாரால் கீதா உபன்யாஸமும் 4உ அமாவாசை பஜனையும் நடத்தப்பட்டதாக காரியதரிசி ஸ்ரீமான் M. S. பத்மநாபராவ் அறிவிக்கிறார்.

## மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்.

வழக்கப்படி இந்த யுவஸம்வத்ஸரத்து மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்கள் அடுத்த பௌர்ணமிக்குள் வெளியாகக்கூடும். சென்ற வருஷத்திய காலண்டரில் கண்டபடி அயனம், ருது, மாஸம், மாஸமூர்த்திகள், இங்கிலீஷ்மாஸம், தமிழ்மாஸம், வாரம், சிராத்ததிதி, ஸந்தியாவந்தன திதி, நக்ஷத்திரம், முதலியவைகளின் விபரமும் உத்திராதி மடம், விஜயராஜமடம், ராகவேந்திர ஸ்வாமி மடம் இந்த மடங்களின் ஸ்வாமிகளின் புண்யதினங்கள், பண்டிகைகள், விரதங்கள், கல்பங்கள். ஏகாதசி உபவாஸாதிகளின்

நிர்ணயங்கள், கிருஹண நிர்ணயங்கள், தசமி ஹரிவாஸரம், த்வாதசி ஹரிவாஸரம், சாதனி முதலியவைகளின் மணிக்கணக்குப் படிக்குள்ள நிர்ணயம் முதலிய அநேக விவரங்கள் அடங்கியிருக்கும். இதன் விலை பிரதிக்கு அணா இரண்டேதான். தபாற் கூலி பிரதி 1-க்கு பைசா 9/-. காலண்டர்கள் வேண்டுபவர்கள் பிரதி 1-க்கு 0-2-9 வீதம் முன்னுடி போஸ்டேஜ் ஸ்டாம்பு மூலமாய் அனுப்பவேண்டும். புக்போஸ்ட் மூலமாய் அனுப்பப்படும் காலண்டர்கள் சரியானபடி போய்ச்சேராதிருந்தால் நாம் ஜவாப்தாரியல்ல. பத்திரமாய் அடைய விரும்புகிறவர்கள் ரிஜிஸ்டர் செலவை அனுப்பவேண்டும். வெளியூர்களுக்கு மொத்தமாய் விற்பனைக்கு அனுப்பப்பட்டிருந்தால் தபாற்செலவுக்காக சேர்ந்து பிரதி 1-க்கு அணா இரண்டு பைசா ஒன்பது வீதம்தான் விலை கொடுக்கப்படவேண்டியதாகும். தேவைக்குத் தகுந்தபடி காலண்டர்கள் அச்சிடப்படுவதால் அந்தந்த ஊருக்கு தேவையான காபிகளை முன்னுடியே ஆர்டர் செய்வது நலம். இந்த ஸம்வத்ஸரத்தில் அநேகர் முன்னுடி ஆர்டர் செய்யாதிருந்து காபிகள் இரண்டு வாரத்திற்குள் செலவாய்போய் ஏமாந்திருக்கின்றனர். காபிகள் விற்பனைக்கு தயாரானவுடன் அவைகள் அந்தந்த ஊர்டருக்குத்தகுந்தபடி அனுப்பப்படும். இதற்காக சென்ற வருஷம் போல் அடுத்தடுத்து Reminderகளை அனுப்பாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், மாத்வமித்திரன் ஆசிரியர்,
ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்

---

யுவஸம்வத்ஸரம், சைத்ரமாஸம்

| | | |
|---|---|---|
| | | ஸம்வத்ஸரப்பண்டிகை. |
| 4—4—35 | குருவாரம் | ஸ்ரீராமநவமி. |
| 12—4—35 | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 14—4—35 | பானுவாரம் | ப்ரதோஷம் |
| 16—4—35 | மங்களவாரம் | சித்ராபௌர்ணமி விஷ்ணுபஞ்சக வ்ரதம் |
| 18—4—35 | குருவாரம் | வைசாகஸ்நானம் ஆரம்பம். |
| | | சிரவண உப. விஷ்ணு ப. உப. |
| 26—4—35 | சுக்ரவாரம் | ஏகாதசி. |
| 29—4—35 | சோமவாரம் | த்வாதசி ஸாதனி நாழிகை 1—56 |
| 30—4—35 | [illegible] | [illegible]ரையில். ப்ரதோஷம். |
| | | [illegible] அமாவாசை, விஷ்ணுபஞ்சக உபவாஸம். |
| [illegible]—5—35 | குருவாரம் | |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவாலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்**:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி**:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்**:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்**:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை. 6.

**துருவசரித்திர நாடகம்**:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்**:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பவேண்டும். Certificate of Posting பேரில் புஸ்தகம் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த [illegible] ஜவாப்தாரியல்ல.

[illegible]மித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3

Regd. No.


# டி. எஸ். ஆர்.
அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தாயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at SRI VENKATESWAR PRINTING WORKS and
Published by Bhagavatha Renganathachar